Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 09 (15.11.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 46

சொலெக்ஸ்
முக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்கவும், செயற்கை மாபிள் கண்களுக்கும் மற்றும் பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷறி பல் கட்டுமிடம்
232 /A, கண்டி வீதி, சாவகச்சேரி.
(சி-174)

# அரசு - புலிகள் பேச்சிலேயே முடிவு;

# ஜனாதிபதி யோசனை தேவையில்லை!



## இறுதித் தீர்ப்பு நாடாளுமன்றில்; அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவிப்பு!

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாட்டு மக்களுக்கான தனது உரையில் பிரேரித்த - சகல கட்சிகளையும் உள்ளடக்கிய தேசியக் கவுன்சில் யோசனையை - அரசாங்கம் நிராகரிப்பதாகவும் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களிலேயே முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அது பாராளுமன்றத்தில் பின்னர் சமர்ப்பிக்கப்படும் என்றும் - அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.**

அரசாங்கப் பேச்சாளரும் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கும் போது:-

அரசாங்கமானது இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தேடுவதான பொறுப்பைக் கொண்டிருக்கும்போது, எதிர்க்கட்சிகள் - தாமாகவே முடிவுகளை மேற்கொள்ளும் எந்தவித நிலைப்பாட்டினையும் நாம் ஆதரிக்கமாட்டோம். 1997இல் பிரிட்டிஷ் வெளிவிவகார பிரதியமைச்சர் லியம் பொக்ஸ் - இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையே ஏற்படுத்திய உடன்பாட்டுக்கமைய, எதிர்க்கட்சியாகவுள்ள தரப்புக்கு, தீர்வைத் தரும் எந்தப் பொறுப்பும் தரப்படவில்லை என்பதை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரு

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை நீக்க அவுஸ். தமிழர் கோரிக்கை

(மெல்பேர்ண்)

அவுஸ்திரேலியாவில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்குமாறும், பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வந்துள்ள நிலையில் இத்தடை நீக்கப்பட வேண்டியது அவசியமென்றும் அவுஸ்திரேலியாவிலுள்ள தமிழர் அமைப்புக்கள் அந்நாட்டு அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

இதற்கு முன்னர் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பிரதி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடந்த நிகழ்வொன்றில் பேசும்போது, விடுதலைப்புலிகள் மீதான தடையை அவுஸ்திரேலிய அரசாங்கம் விலக்க வேண்டுமென்று பகிரங்கக் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

☞ உள்ளே...
அரச ஊழியர்களுக்கான சுயவிருப்பு ஓய்வூதியத் திட்ட விபரம் 2ஆம் பக்கத்தில்.

## சமாதானப் பேச்சு உடன்பாடு எதுவும் எனது சம்மதமின்றி நிறைவேறாது!



### ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் எந்தவிதமான உடன்பாடுகள் ஏற்பட்டாலும் எனது சம்மதமின்றி அவற்றினை அமுல்செய்ய முடியாது என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டியில் மாணவர்கள் மத்தியில் கூட்டம் ஒன்றில் பேசும்போதே ஜனாதிபதி இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களின் விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் அறியத்தரப்படவில்லை. அங்கு நடந்ததன் ஒரு சதவீதமான விடயங்களே எனக்கு அறியத்தரப்பட்டுள்ளது என அவர் அங்கு குற்றஞ்சாட்டினார்.

புலிகளின் தலைவர் (10ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரம் தடம்புரண்டு 8 மாநகரசபை ஊழியர் காயம்

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திப் பகுதியில் மாநகரசபையின் உழவு இயந்திரம் ஒன்று தடம்புரண்டதில் எட்டுப் பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 3 மணியளவில் உழவு இயந்திரத்தின் பெட்டி மேற்படி பகுதியில் தடம்புரண்டபோது - இப்பெட்டியில் இருந்து பயணஞ்செய்த இராசேந்திரம் சந்திரன் (வயது 23), கதிரைமலைநாதன் சதீஸ்குமார் (வயது 26), மனோகரன் ஜெகதீஸ்வரன் (வயது 24), அந்தோனி குணரெட்ணம் (வயது 22), ஜோசப் றொபின்சன் (வயது 34), ஜெபநேசன் சிறி (வயது 23), செல்வம் நிமலதாஸ் (வயது 24), முத்தையன் முகலிங்கம் (வயது 33) ஆகிய மாநகரசபை ஊழியர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (60)

## தமிழ்மொழிப் பாடநெறியில் நூறு படையதிகாரிகள் பூர்த்தி!

சிறிலங்கா இராணுவத்தில் தமிழ் மொழிப் பாடநெறியை முடித்துக் கொண்ட நூறு அதிகாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றுள்ளது.

பாடநெறியைப் பூர்த்திசெய்த இராணுவ அதிகாரிகளுக்கான சான்றிதழ்களை நீதி, புத்தசாசன, தேசிய நல்லிணக்க அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார வழங்கினார்.

இந்நிகழ்வில் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோர் பங்கேற்றனர்.

### விண்ணாணம் விநாசியர்



அடிக்கடி முரண்பட்டுக்கொள்ளுற சாதனையில அம்மையார் கின்னஸ் றெக்கோட் வைக்கப்போறார்...

## 36 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நிறைவேறியது

அரசின் வரவு செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் 36 அதிகப்படியான வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. திட்டத்திற்கு ஆதரவாக 129 பேரும் எதிராக 93 பேரும் வாக்களித்தனர்.

தமிழக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி. எம்.பிக்கள் எதிராக வாக்களித்தனர்.

மேற்படி வரவு - செலவுத் திட்டத்திற்கு திருத்தம் எதுவும், நடைபெற்ற விவாதத்தில் முன்வைக்காமையினால், வரவு - செலவுத் திட்டத்திற்கான குழுநிலை விவாதம் அவசியமில்லை என தொழிற்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். எனினும் தாம் திருத்தங்களை வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## கைவிடப்படும் பெண்களுக்காக யாழில் மரபணுச் சோதனை!

### யு.என்.எச்.சி.ஆரிடம் யாழ். நீதவான் உதவி கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்டப்படி திருமணம் செய்யாமல் ஏமாற்றப்பட்டுக் கர்ப்பம் தரிக்கும் பெண்களுக்கு உதவ மரபணுப் பரிசோதனையை (D.N.A. Test) செய்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறு யாழ். நீதவான் ஆர்.ரி.விக்னராஜா தம்மைச் சந்தித்த யு.என்.எச்.சி.ஆர். குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, யு.என்.எச்.சி.ஆரிடம் என்ன உதவிகளை யாழ். நீதிமன்றம் எதிர்பார்க்கின்றது எனக் கேட்டபோது, யாழ்ப்பாணத்தில் தற்போது

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலய எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படும்!

### நாளைய உபகுழுக் கூட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான எல்லைகளை தெளிவாக வரையறை செய்வதற்கு பாதுகாப்பு உபகுழுவின் யாழ். மாவட்டக் குழுவின் நாளைய கூட்டத்தில் முயற்சி எடுக்கப்படவுள்ளது.

தெல்லிப்பளையில் நாளை நடைபெறவிருக்கும் மேற்படி கூட்டத்தில் அரச மற்றும் புலிகளின் உயர் தளபதிகள் பங்குகொள்ளவுள்ளனர். அத்துடன் யாழ். அரச அதிபரும் அநேகமாகப் பங்குபற்றவுள்ளார்.

அனைத்துப் பிரதேச செயலர்

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB
விமான சேவை
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 517019
(சி-148)

## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை கணக்கர் சந்திக்கு அண்மையில் நாற்புறமும் மதிலோடு கூடிய நவநாகரீக வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.ஏ.தர்மலிங்கம், 344, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். (030)

### தேவை

எழுதுவினைஞர், கணினி தட்டெழுத்தாளர் தேவை. நேரில் வரவும். இன்று (15.11.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 - 6மணி. திகழ் கல்வி நிறுவனம், கே.கே.எஸ். வீதி, இணுவில். (033)


**கணபதி களஞ்சியம்**

பலாலி வீதி, கோண்டாவில்.

சைக்கிள் உதிரிப்பாகங்கள், அழகு சாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பத்திரிகை விற்பனைக்கு உண்டு. (சி-182)


எமது அன்புக்குப் பாத்திரமான

தோழர், ஆசிரியர், அதிபர், உறவினர், நண்பர்

**அமரர் மு.கார்த்திகேசன்**

(ஜூன் 25, 1919 - செப்ரெம்பர் 10, 1977)

அவர்களின் வாழ்வினைக் கௌரவிக்குமுகமாக அவர் மறைவின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய

## நினைவு நூல் வெளியீடு

இடம் : பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், 75, லோறன்ஸ் வீதி, கொழும்பு - 04, இலங்கை.

காலம் : 17.11.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி

வரவேற்புரை : ஜானகி பாலக்கிருஷ்ணன்

தலைமை : கலாநிதி வி.அம்பலவாணர் *(யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவர், பிரதமர் அலுவலக ஆலோசகர்)*

நூல் வெளியீட்டுரை : திரு.எம்.குமாரசாமி *(இளைப்பாறிய ஆசிரியர், வடபிரதேசத் தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபையின் முன்னாள் செயலாளர்)*

நூல் ஆய்வுரை : பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

நன்றியுரை : சுமதி குகதாசன்

அமரர் கார்த்திகேசன் மீது அன்பும் அபிமானமும் கொண்ட அனைவரையும் குடும்பத்தினர் சகிதம் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– நினைவு நூல் வெளியீட்டுக் குழு.

(034)

# அரசாங்க ஊழியர்களுக்கான சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

அரசசேவையில் பணியாற்றி சுயவிருப்பில் ஓய்வூதியம் பெற்றுச் செல்ல விரும்புபவர்களுக்கான நட்டஈடு வழங்கும் அரசின் அறிவிப்புத் தொடர்பான அறிவித்தல் வெளியாகியுள்ளது. அதன் விபரம் வருமாறு:-

இத்திட்டம் 4 வகைகளாக வகுக்கப்பட்டுள்ளது. பொருத்தமுடைய ஊழியர்கள் இவற்றில் ஏதாவது ஒன்றின் கீழ் ஓய்வூதியம் பெறமுடியும்.

*திட்டம் 01:-* ஓய்வூதியத் திகதியில் ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெறும் ஊழியர்களுக்கான நட்டஈடு.

*திட்டம் 02:-* ஓய்வுபெற்று ஆனால் ஓய்வூதியத்தை 57 வயதிலிருந்து பெறும் ஊழியர்களுக்கான நட்டஈடு.

*திட்டம் 03:-* ஓய்வுபெற்ற ஆனால் ஓய்வூதிய நன்மைகளை பெறத்தவறியவர்களுக்கான நட்டஈடு.

*திட்டம் 04:-* 57 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கான நட்டஈடு.

**பொது நிபந்தனைகள்**

1. நட்டஈடு கொடுப்பனவுக்கான ஓய்வுபெறும் வயது 57 ஆகக் கொள்ளப்படும்.
2. அடிப்படைச் சம்பளத்தைக் கொண்டே நட்டஈடு கணிக்கப்படும். (இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் ஏனைய சலுகைகள் கருத்தில் எடுக்கப்படமாட்டாது)
3. நட்டஈட்டுக்கு மேலதிகமாக உபகாரத்தொகையும் (Gratuity) 1ஆம், 2ஆம், 3ஆம் திட்டங்களுக்குக் கீழ் ஓய்வுபெறுபவர்களுக்கு வழங்கப்படும். 4ஆம் திட்டததின்கீழ் வருபவர்களுக்கு ஓய்வூதியத் திட்டப்படி வழங்கப்படும்.
4. இத்திட்டத்தின் கீழ் ஓய்வுபெறுபவர்கள் ஓய்வுபெற முன்பாகத் தமது லீவுகள் அனைத்தையும் பயன்படுத்தியிருக்க வேண்டும்.
5. அனைத்து நிலுவைகளும் நட்டஈட்டுத் தொகையில் கழிக்கப்படும்.
6. இத்திட்டத்தில் ஓய்வுபெறும் ஊழியர்கள் மீண்டும் அரச சேவையில் இணைய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் வெளிநாட்டு நிதியுதவியில் நடைபெறும் வேலைத்திட்ட முகாமைத்துவங்களில் இணையத் தடையில்லை.
7. ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குட்பட்டவர்கள், விசாரணைகளுக்குட்பட்டிருப்பவர்கள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வுபெற முடியாது.
8. சம்பளமற்ற லீவில் உள்ள அரச ஊழியர்கள், கட்டாய சேவையில் உள்ள அரச ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெறலாம்.

**திட்டம் 01 இன் விரிவு**

*10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்ற, ஆனால் 60 வயதிலிருந்து ஓய்வூதியம் பெறும் ஊழியர்கள்.*

1. கடந்த சேவை:- சேவையில் ஒவ்வொரு ஆண்டும் மாதாந்த சம்பளத்தின் அரைப்பகுதி
2. ஆற்ற வேண்டிய சேவை:- ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு மாதச்சம்பளம்.
3. குறைந்தளவு நட்டஈடு - ஒரு வருடச் சம்பளம்.

**திட்டம் 02 இன் விரிவு**

*10 வருடத்துக்கு மேற்பட்ட சேவை, ஓய்வுபெற்ற திகதியிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு.*

1. சேவையின் ஒவ்வொரு வருடத்தில் அரை மாதங்களுக்கான சம்பளம்.
2. நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பில் ஆற்றவேண்டிய சேவைக்காலம் கருத்திலெடுக்கப்படமாட்டாது.
3. குறைந்தளவு சம்பளமாக ஆறு மாதங்களுக்கான கொடுப்பனவு.

**திட்டம் 03 இன் விரிவு**

*3.1* ஓய்வூதியம் பெறத்தகுதியானவர்களுக்கான நட்டஈடு - ஓய்வூதியம் பெற்ற, ஆனால் ஓய்வூதியச் சலுகை பெறத்தவறியவர்களுக்கானது.
நட்டஈடு பின்வரும் கணிப்பீட்டில் வழங்கப்படும்.

$$\frac{(\text{ஆயுட்காலம் - தற்போதைய வயது}) \times 60}{100}$$

தற்போதைய எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் பெண்களுக்கு-72வயது, ஆண்களுக்கு -70 வயது.

*3.2* பத்து வருடங்களுக்கும் குறைந்த சேவையாற்றியவர்களுக்கு

1. கடந்த சேவை:- சேவையின் ஒவ்வொரு வருடத்திலும் 4 மாதச் சம்பளம்.
2. ஆற்ற வேண்டிய சேவை:- கணிக்கப்படமாட்டாது.
3. குறைந்தளவு நட்டஈடு:- 10 மாதச்சம்பளம்.

*3.3* தற்காலிக/அமைய/ஒப்பந்த ஊழியர்களுக்கு.

1. ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு மாதச்சம்பளம்.
2. ஆற்றவேண்டிய சேவைக் காலம் - நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பில் கருத்திலெடுக்கப்படும்.
3. குறைந்தளவு சம்பளமாக 3 மாதச்சம்பளம்.
4. இந்த வகை ஊழியர்களுக்கான நட்டஈட்டுக் கணிப்பீடு.

தினப்படி ஊழியர்களுக்கு -
22 x தினப்படி x மாதங்கள்
ஏனைய ஊழியர்களுக்கு -

$$\frac{(\text{ஆயுட்காலம் - தற்போதைய வயது}) \times \text{தற்போதய ஆண்டுச் சம்பளம்} \times 60}{100}$$

இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதிய நன்மைகள் கிட்டாது. தற்போதைய ஆயுட்காலம் பெண்கள் - 72 ஆண்கள் - 70

**திட்டம் 04 இன் விரிவு**

*57 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கான நட்டஈடு.*

1. 57 வயதுக்கு மேற்பட்டவர்கள் 60 வயது வரைக்குமான லீவைச் சமர்ப்பிக்க முடியும். (சம்பளத்துடன் கூடிய லீவு)
2. இவர்கள் தமது ஓய்வூதியத்தை 60 வயதிலிருந்து பெற முடியும்.
3. முழுச்சம்பள லீவு காலப்பகுதியில் ஆண்டு சம்பள அதிகரிப்பு வழங்கப்படமாட்டாது.

**ஒரே பார்வையில் ஆகக்கூடுதல் நட்டஈட்டுத் தொகை**

| | திட்டம்I | திட்டம்II | திட்டம்III |
|---|---|---|---|
| மேல்தரம் | 500,000 | 200,000 | 2,500,000 |
| நடுத்தரம் | 300,000 | 150,000 | 1,600,000 |
| கீழ்மட்டப்பிரிவு | 200,000 | 100,000 | 1,000,000 |

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

1. பிரதான உணவகம், திருநெல்வேலி
2. பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்
3. ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதி உணவகம்
4. இராமநாதன் நுண்கலைக்கழக பெண்கள் விடுதி உணவகம்
5. இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்
6. மருத்துவபீட உணவகம்

ஆகிய உணவகங்களை நடாத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதியாளரினால் 12.12.2002 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000 உம் மீளளிக்கப்படாத க்ட்டணமாக ரூபா 200 உம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு விண்ணப்பப்படிவம் ஒரு உணவகத்திற்கு விண்ணப்பிப்பதற்கே உபயோகிக்கலாம். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர். (சி-183) 13-11-2002.

### கடை விற்பனைக்கு

முனீஸ்வரன் வீதியில் கடையுடன் கூடிய நான்கு மாடிக் கட்டடம் (திருத்த வேலைகள் செய்யவேண்டிய நிலையில்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மா.இராசேஸ்வரன்
வேல்முருகன் றேடர்ஸ்,
56 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (031)


**இறைச்சிக் கோழி**

தரமான பிறிமா இனப் புறோயிலர் இறைச்சிக்கோழி விற்பனைகது உண்டு. விலை 1kg 110/= மட்டும்.
வதனா களஞ்சியம்,
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில். (செந்தில் கடை) (035)

ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெஷல்
குங்குமப்பூ சிக்கன் புரியாணி
ரூபா 125
**ஜெசித்தாரா**
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டிக்குளி. (சி-163)

**ராஜா**
யாழ்ப்பாணம்.

தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-151)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
**யூத்**
இன்று முதல்
விஜய், சந்தியா
நடித்த
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
(சி-139)


## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

திரு. திருமதி பாஸ்கரன் தம்பதியரின்
அன்பளிப்பு நிதி ஊடான சுழற்சி முறை இலகு கடனில்
பயனாளிகளுக்கு
12 தையல் மெசின்களை வழங்கும்

### கௌரவிப்பு விழா

இடம் : நெல்லை முருகன் திருமண மண்டபம்

காலம் : 2002.11.17 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப. 10.00 மணி

தலைவர் : திரு.தம்பையா சிதம்பரப்பிள்ளை, சங்கத் தலைவர்

பிரதம விருந்தினர்

**கலாநிதி திருமிகு அ.சோமசுந்தரம்பிள்ளை**
பட்டயக் கணக்காளர்

கௌரவ விருந்தினர்கள்

**திரு.செ.ஸ்ரீநிவாசன்**
பிரதேச செயலர், கரவெட்டி

**திரு.இ.தயா**
அரசியல்துறை, வடமராட்சி

**திரு.செ.கனகசபாபதி**
கூ.அ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம்

சிறப்பு விருந்தினர்கள்

**திரு.பெ.கனகசபாபதி**
தலைவர், யா.மா.கூ.சபை

**திரு.சி.வி.கே.சிவஞானம்**
தலைவர், யா.கூ.சங்க சமாசம்

**திரு.சி.சிவமகாராசா**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
கட்டைவேலி – நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்.

30.11.2002
கரவெட்டி. (சி-181)

# புலிகளின் பகுதிக்குள் நுழையமுயன்ற படையினர்!

## - கண்காணிப்புக் குழுவின் தலையீட்டால் திரும்பினர்! -

(வவுனியா)

மன்னார் மாவட்டத்திலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி ஆயுதங்களுடன் நுழைய முயன்ற படையினர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று இடம் பெற்றுள்ளது. மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டில் சிலாவத்துறைக்கு அப்பாலுள்ள கொக்குப்படையான், கல்லாறு போனற பல கிராமங்கள் உள்ளன. கொக்குப்படையானில் இருந்து ஆறு கி.மீ தொலைவில் உள்ள கல்லாறு கிராமத்தில் பாலம் அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

இதனைப் பார்வையிடுவதற்கு எனக்கூறிப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தள்ளாடி இராணுவமுகாம் படையினர் நுழைய முற்பட்டனர். சிலாவத்துறைக்கு அப்பால் படையினர் சென்றுகொண்டிருந்தபோது புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இது தொடர்பாக முறையிட்டனர்.

கண்காணிப்புக் குழுத் தலைமை அலுவலகம், பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து கல்லாறு நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரை உடனடியாகத் தள்ளாடிக்குத் திரும்புமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து படையினர் தள்ளாடிக்குத் திரும்பிச் சென்றனர்.

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் -27



**ஒரு உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன்: ஆனால், உயிரினும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.**

**வே.பிரபாகரன்**
**தமிழீழத் தேசியத் தலைவர்.**

## மாவீரர் நாளை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது மாவீரர் எழுச்சிநாளாகத் தமிழீழ மெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சிமிகுந்த இந்த மாவீரர் எழுச்சி நாளானது நவம்பர் 25 - இல் தொடங்கி நவம்பர் 27 - இல் முடிவடைகின்றது. இம்மாவீரர் நாட்களைக் கொண்டாடும் முகமாக நவம்பர் 25 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழீழமெங்கும் புனிதப்பட்டுவிடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற்படங்கள் அமைத்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கி விடுகின்றனர். இவை யாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டுத் தமிழீழ நாடு புதுப் பொலிவுடன் விளங்கும்.

**அரசியல்துறை, யாழ். மாவட்டம்.**

# கச்சாயில் மீன் பிடிக்க மீண்டும் படையினர் தடை விதிப்பு!

## உயர் பாதுகாப்பு வலயமாம்!

(சாவகச்சேரி)

கச்சாய் கடற்பரப்பில் வள்ளங்களில் சென்று மீன் பிடிப்பதற்கு மீண்டும் இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

அண்மையில் இப்பிரதேசத்தில் இருந்த 10 வள்ளங்கள் மூலம் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதனையடுத்து ஏனைய மீனவர்களும் புதிதாக வள்ளங்களை கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபட்டு வரும் வேளையில், இப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் எனக் காரணம் காட்டப்பட்டு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 10 வள்ளங்கள் உட்பட அனைத்து வள்ளங்களும் இக் கடற்பரப்பில் நுழைய இராணுவத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# குரோஷிய ஜனாதிபதி கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

குரோஷிய ஜனாதிபதி ஸ்டெய்ப் மீசிக் இவ்வார இறுதியில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வருகிறார். இவருடன் குரோஷிய வர்த்தகர்கள் அடங்கிய குழு ஒன்றும் வருகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் ஜனாதிபதி மீசிக் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொள்ளவுள்ளார்.

# யூரோ நாணயத்தில் பாப்பரசரின் சின்னம்!

(மானிப்பாய்)

எதிர்வரும் 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளிவரவுள்ள ஐரோப்பாவின் பொது நாணயமான யூரோவில் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் தலைச் சின்னம் பொறிக்கப்படவுள்ளது.

புதிய யூரோ நாணயங்களும், நோட்டுக்களும் 2003 ஜனவரியில் வெளியிடப்படவுள்ளன, ஐரோப்பாவின் பதினொரு நாடுகள் இந்த யூரோ நாணயத்தை ஏற்றுக்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (100)

# கிளிநொச்சிக்கு விரைவில் 60 தொலைபேசி இணைப்புகள்

## ரெலிகொம் நடவடிக்கை!

கிளிநொச்சிக்கு விரைவில் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. கிளிநொச்சி 155 ஆம் கட்டைக்கருகில் முன்னர் தொலைத் தொடர்புக்கோபுரம் இருநத இடத்தில் புதிதாக கோபுரமொன்று அமைக்கப்படவுள்ளது.

முன்னர் 1996 ஆம் ஆண்டு விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சினால் தொலைத் தொடர்பு கோபுரம் சேதமடைந்தது. ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் அங்கு உப பரிவர்த்தனை நிலையம் ஒன்றை அமைத்து முதல் கட்டமாக 60 தொலைபேசி இணைப்புக்களை வழங்கவிருக்கின்றது. பின்னர் படிப்படியாக இணைப்புக்கள் வழங்கப்படும் என்று ரெலிகொம் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கண்ணிவெடி எதிர்ப்பு ஒப்பந்தம் சிஹல உறுமய கண்டனம்

(கொழும்பு)

மூன்றாவது சுற்று சமாதானப் பேச்சுக்கள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கத் தயாராகி வரும் நிலையில் கண்ணிவெடிகளை தவிர்க்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் திட்டமிட்டுள்ள அரசின் யோசனைகளை சிஹல உறுமய வன்மையாக கண்டித்துள்ளது.

ஒட்டாவா ஒப்பந்தப்படி கண்ணிவெடி தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இலங்கை அரசு கைச்சாத்திடுவது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகும் என அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

## ஒஸ்லோ வருமாறு பொ.ஐ.மு எம்.பிக்களுக்கு அழைப்பு

# நோர்வே அரசின் வேண்டுகோளை நிராகரித்தார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு நிருபர்)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை நோர்வேக்கு வருகை தருமாறு அந்நாட்டு அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கின்றது.

இலங்கைப் பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு முயற்சியில் இறங்கியுள்ள நோர்வே, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒஸ்லோவுக்கு அழைத்து பேச்சுக்களை நடத்துவதற்காகவே இவ் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் நோர்வேயின் அழைப்பை ஏற்று ஒஸ்லோவுக்குச் செல்லக்கூடாது என ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

தானே நோர்வே அரசாங்கத்தை சமாதான முன்னெடுப்பை மேற்கொள்ளுமாறு முதலில் அழைப்பு விடுத்ததாகவும், தற்போது நோர்வே தன்னை உதாசீனம் செய்வதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் உள் விவகாரங்களில் நோர்வே தலையிடுவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

# மீளக்குடியமர அனுமதி வழங்காவிட்டால் போராட்டம்!

## - கொட்டடிப் பகுதி மக்கள் எச்சரிக்கை -

(வடமராட்சி)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதி மக்களை மீளவும் சொந்த இடத்தில் குடியேற அனுமதிக்கும் படி கோரி- பருத்தித்துறை நகர மட்டுப்படுத்தப்பட்ட கடற்றொழிலாளர் சங்கத்தால்- பிரதம மந்திரிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் மீளக் குடியமர உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தவறினால்- மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்வரும் 28ஆம் திகதியன்று சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்தத் தீமானித்துள்ளோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (23)

### சமாதான நீதிவான்கள் கௌரவிப்பு

சமாதான நீதவான்களாக சமீபத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ஆசிரியர் எஸ்.பத்மராஜா, களஞ்சியப் பொறுப்பாளர் கே.அருள்நாயகம், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். இராசையா ஆகியோரைக் கௌரவிக்கும் விழா 17 ஆம் திகதி பி.ப.4மணிக்கு திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.


லயன் வ. பரமசிவம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# ஜனாதிபதி செயலகத்தில் அட்டகாசம் புரிந்த யானை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவிஏற்று எட்டு வருட நிறைவையொட்டி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் யானைக் குட்டி ஒன்று பெரும் கலகம் விளைவித்துள்ளது.

இராணுவத்தினருக்குச் சொந்தமான 'கந்துல' என்ற இந்த யானை திடீரென்று வெறி கொண்டு வைபவம் நடைபெற்ற ஜனாதிபதி செயலகத்திலிருந்த பாதுகாப்புக் கண்காணிப்புக் கருவிகளை அடித்து நொருக்கியது. இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. இறுதியில் பாகனினால் யானை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.



## நூற்றாண்டு பரிசளிப்பு விழா

கரவெட்டி மாணிக்க வித்தியாலய நூற்றாண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர்.கா.சிவத்தம்பி உரையாற்றுவதையும், வித்தியாலய அதிபர் இ.இராகவன், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர், இளைப்பாறிய அதிபர் மன்னவன் கந்தப்பு ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

### கணக்குகளை உறுதிப்படுத்துமாறு அறிவிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு என்பன வைத்திருப்போர் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுடைய கணகதுகளை உறுதிப்படுத்திக கொள்ளுமாறு சங்கத்தின் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (29)

# ஐஸ் தொழிற்சாலை விரைவில் முல்லைத்தீவில் அமைக்கப்படும்

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐஸ் தொழிற்சாலை ஒன்றை விரைவாக அமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன உறுதியளித்துள்ளார்.

ஐ.தே.கயின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் மகேஸ் தவச்செல்வம், புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே முல்லைத்தீவில் ஐஸ் தொழிற்சாலை அமைத்துக் கொடுக்க உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும், வவுனியாவில். முகாம்களில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு கூரை விரிப்புகளை வழங்கவும், வவுனியாவில் கணினிப் பயிற்சி நிலையம் ஒன்றை விரைவாக அமைத்துத் தரவும் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன உறுதியளித்துள்ளார்.

# நேருக்கு நேர் கடற்சண்டையில் தொலைத் தொடர்பே முக்கியம்

*நேற்றைய தொடர்ச்சி...*

தொலைத் தொடர்புத் துறையில் கடற்புலிகள் பெற்றுள்ள ஆளுமையும் முக்கியமான ஒன்று. போரில் தொலைத் தொடர்பு மிகமுக்கியமானது. அதிலும் கடற்சமரில் இதுமிக அவசியமானது. இதுபற்றி அந்தத் தொலைத் தொடர்புப் பொறுப்பாளர் நிலாவே விளக்குகிறார். "கடலில் சண்டைசெய்வதென்பது தரைச்சண்டையைவிட சவாலானது. தரையில் கண்களைக் கட்டிவிட்டுச் சண்டை செய்வது பற்றி ஒருதடவை கற்பனை பண்ணிப் பாருங்கள். அப்படித்தான் கடல்ச் சண்டை இருக்கும். எங்கும் இருள். எதுவும் தெரியாது. வெள்ளிகளைத் தவிர வேறொன்றும் எமக்குத் துணை நற்காது. இந்த நிலையில் தொலைத் தொடர்பு என்பது மிகவும் முக்கியமானது".

ஆரம்பத்தில் தமக்கு இந்தத் தொலைத்தொடர்புப் பயிற்சிகளை வழங்கியவர்களாக, அண்மையில் நோய் காரணமாக மரணமெய்திய கேணல் ராஜு மற்றும் லெப்.கேணல் நரேஸ் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூறுகிறார் அவர். "தொலைத் தொடர்பு இல்லாமல் கடற்சமரில் எதையும் சாதிக்க முடியாது. கடற் சமரைப் பொறுத்தவரையில் கட்ட

தடவை ஒரு நீண்ட கடற்பயணத்தின்போது எமக்கு நேர்ந்தது. அப்போது இயற்கையையும் காலநிலையையும் வைத்தே, நாம் எமது படகைக் கரைசேர்த்தோம்" என்கிறார்.

'இது எப்படி சாத்தியமாகிறது?'.

நாம் தொலைத்தொடர்பை எவ்வளவுக்கு நம்புகின்றோமோ, அந்தளவுக்கு இயற்கையையும் நம்புகிறோம். பல சமயங்களில் அதுவே எமக்கு கைகொடுக்கின்றது. எனவே தான் நாம் தொலைத தொடர்பு பற்றிக் கற்குமளவுக்கு, இயற்கை, காலநிலை என்பன பற்றியும் முக்கியமாக கற்கிறோம். ஆரம்பத்திலும் இது பற்றி எமக்கு மீனவர்களே சொல்லித் தந்தார்கள். பின்னர் நாங்களே மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்தோம். ஆம், இவ்வாறுதான் விடுதலைப்புலிகளது கடற்படைப் பிரிவே உதயமானது. ஒரு கடற்சண்டை அணியை உருவாக்குவதற்கான எவவித வளங்களோ, நிபுணத்துவ ஆலோசனைகளோ இன்றி, அவசியத தேவை காரணமாக கடற்புலிகளின் அமைப்பு உருவாக்கப்பட்டது. இயற்கையில் இறங்கி, அதனோடு போராடி, அதனிடமிருந்தே புலிகள் பலதையும் கற்றுக்கொண்டுள்ளனர். இந்த அமைப்புக்கான பயிற்சிகளை

கடற்புலி அணியில் சேர்க்கப்பட்ட 30 பேரில் இப்போது இருவர் மட்டுமே எஞ்சியுள்ளோம்" எனத் தமது வரலாற்றுச் சுருக்கத்தை சொல்லி முடித்தார் நிலா. அந்த இருவர்

தாவது ஏற்பட்டு இருக்கிறதா?' என்று கேட்கவும், அவர் தொடர்ந்தார்.

"கடற்சண்டை ஒன்றின் போது, படகிலிருந்த போராளிகள் அனைவரும் வீரச்சாவடைந்து விட்டனர்.

ஒரு அனுபவத்தைக் கூறினார்.

"அத்தகைய சந்தர்ப்பங்களில் உங்களுக்குப் பயமாக இருக்காதா?. அவ்வளவு பெரிய கடலில், நீங்கள் மட்டும் தனித்திருக்கும் போது நீங்கள் அச்சமடையமாட்டீர்களா?' என்று கூடியிருந்த பெண்ணொருவர் தனது அப்பாவித்தனமான சந்தேகத்தைக் கேட்கவும் -

"அத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எமது மனதில் இருப்பதெல்லாம், எப்படியாவது எமது படகையும், அதிலிருக்கும் ஆயுதங்களையும் எதிரியின் கைகளில் சிக்கிவிடாமல் கரைசேர்த்துவிட வேணடும் என்பதுதான். அந்த உத்வேகத்தில் எந்த அச்சமும் எம்மை அணுகாது" என்று அந்தக் கடற்புலிப் பெண்



அணிவகுத்துச் செல்லும் கடற்புலிப் பெண்போராளிகள்.

- சடாயு -

போராளிகளின் மன உறுதியை விளக்கினார் அவர்.

இவ்வாறு கடற்சமர் தொடர்பில் அனைத்துப் பயிற்சிகளையும் பெற்றுச் சாதனை படைக்கும் இந்தப்

வேறுயாருமல்லர். இந்த நிலாவும் இளந்தென்றலுமே அவர்கள் இருவரும். போராளி நிலா பற்றி மற்றுமொரு தகவலையும் சக போராளி ஒருவர் மூலமாக அறியமுடிந்தது. அவர் எம்மிடம் நேரில் கூறிப் பெருமிதமடிக்காத அவரது சாதனை வரலாறு அது. "நிலா ஒரு காலப்பகுதியில், மகளிர் கடற்புலி அணியின் பொறுப்பாளராக இருந்தவர். கடற்சண்டை ஒன்றிற்காக இதைப் போன்றதொரு படகை அவசரமாக கரையிலிருந்து கடலுக்கு இழுத்துச் செல்லும்போது, நிலா அக்கா, இழுவை வாகனத்தின் சில்லுக்குள் அகப்பட்டுவிட்டார். அவர் மீது வாகனம் ஒரு தடவை ஏறி இறங்கியது. அவர் இன்று உயிர் தப்பி எம்முடன் இருப்பதே பெரிய அதிசயம்" என்று கூறினார் அந்த சக பெண் போராளி.

கடற்புலி அணியினருக்கான பயிர்சி மிகவும் கடுமையானது. சவாலான

அப்போது படகிலிருந்து ஒரு போராளி தான் மட்டுமே எதிரியின் தாக்கு



பக்கவாட்டில் பொருத்தப்பட்டுள்ள விசேட மரேன் சுடுகுழல்.



சுடுகுழலுடன் போராளிகள்.

தலையும் சமாளித்தபடி படகைக் கரை

பெண்போராளிகள், அத்துடன் தமது

ளையிடும் அதிகாரியைவிட, தொலைத் தொடர்பாளர் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். சமயங்களில் அவரே கட்டளை அதிகாரியாகவும் கூடத் தொழிற்படுவார்" என தொலைத் தொடர்பின் முக்கியத்துவத்தை விளககினார் படகின் கட்டளை அதிகாரி இளந்தென்றல்.

"தரைச் சண்டை போன்றதல்ல கடற்சண்டை. தரைச்சண்டை செய்ப

ஆரம்பத்தில் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களே, நேரில் நின்று, தானும் கடலில் பயணித்து வழங்கியதாக, கடற்புலி அணி பற்றி அண்மையில "விடுதலைப்புலிகள்" பத்திரிகையில் ஒரு போராளி எழுதியிருந்தார். இவ்வாறு கடற்புலிகளின் ஆண்கள் அணி உருவாக்கப்பட்ட பின்னர், அவர்கள் மகளிர் பிரிவிற்குப் பயிற்சியளித்தனர். இப்படியா


## காப்பு மறைப்புக்களற்ற கடற்சமரில் பெண் போராளிகளின் சாதனைகள்

தும் கூட. ஒரு கடற்புலிப் போராளி, கடற்சண்டை தொடர்பான அனைத்தையும் கற்றுத்தேர்ந்தவராக இருக்க

சேர்க்க வேண்டியிருந்தது. அததைய ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இவவாறு அனைத்து விடயத்திலும் பயிற்சி

பணி முடிந்துவிட்டது என்று ஓய்ந்துவிடுவதில்லை. கரையோரப்பிரதேசங்களில் முகாமிட்டுச் செயற்பட்டுவரும் இவர்கள், அப்பிரதேசங்களின் அரசியல் செயற்பாடுகள், மக்கள் பணிகளையும் தாமே முன்னின்று செய்து வருகின்றனர். கரையோரப் பிரதேசங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்பங்களில் இவர்கள் தரைச்சமர்களிலும் ஈடுபடத்தவறுவதில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டம், தமிழீழப் பெண்களின் ஆளுமையை எவவளவு தூரம் வளர்த்தெடுத்துவிட்டுள்ளது என்பதற்கு இந்தக் கடற்புலிப் பெண்போராளிகளே தக்க சான்று பகர்கின்றனர். ஆண்களுக்கு நிகராக அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபட்டு, தேசத்தை மீட்கும் பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ள இந்தப் பெண்போராளிகளே, நாளைய தமிழ்ப் பெண்களின் சமூகவிடுதலையையும் உறுதிப்படுத்தப் போகின்றனர் என்பதில் சந்தேகமில்லை.☆



படகு இயக்கும் அறை. உள்ளே கீழே தெரிவது ரடார் தொலைத்தொடர்பு அறை.



படகின் முழுத்தோற்றம்.

வர்களுக்கு நிலம் ஒரு காப்பு. இந்தப் காப்புக்குப் பின்னால் மறைப்பெடுத்துச் சண்டைசெய்யமுடியும். நிலத் தொடர்புகாரணமாக பின்னணிப்பலம் கிட்டும். தொடர்ந்து உதவிகள், விநியோகம் நடைபெறும். கடற்சண்டை அத்தகையதல்ல. காப்பு மறைப்புக் கிடையாது. எதிரியோடு நேருக்கு நேர் மோதவேண்டும். இதற்கு தொலைத் தொடர்பே மிக அவசியமானது" என அவர் மேலும் விளக்கிக் கூறினார்.

கடற்சமரில் உங்களுக்கு மறக்க முடியாத சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்துள்ளனவா? என்று கேட்க, நிலா தொடர்கிறார்."நான் உங்களுக்கு முன்னமே குறிப்பிட்டது போல தொலைத் தொடர்பின்றி கடற்சண்டையோ, கடற்பயணமோ சவாலானது. ஆனால் சமயங்களில் நாம் தொடர்பை இழந்து விடுவதுமுண்டு. அவ்வாறு ஒரு

கவே மகளிர் கடற்புலி அணி உதயமானது.

"ஆரம்பத்தில் நாங்கள் 30 பேர் கடற்புலி அணியில் சேர்க்கப்பட்டோம். எமக்கான பயிற்சிகளை ஆண் போராளிகளே வழங்கினர். கடற்புலிகளின் சிறப்புத் தளபதி, கேணல் சூசை அவர்கள் எமது அணியை முன்னின்று பயிற்றுவித்தவர். அதன் பின்னர் எமது அடுத்தடுத்த அணியினருக்கு நாமே பயிற்சிகளை வழங்கினோம். ஆரம்பத்தில் கடற்புலிப் பெண்கள் அணிகளின் சிறப்புத் தளபதியாக இருந்த லெப். கேணல் நளாயினி, கடற்கரும்புலி மேஜர். மங்கை, லெப். கேணல் பாமா, மேஜர் சுகன்யா ஆகியோரே இந்த மகளிர் கடற்புலிகளின் அணியை வளர்த்தெடுப்பதில் அரும்பாடுபட்டனர். இவர்களில் யாரும் இப்போது உயிருடன் இல்லை. ஆரம்பத்தில்

வேண்டும். சண்டைப்பயிற்சி தவிர, படகைச் செலுத்துதல், இயந்திரப் பொறியியல் வேலைகள், தொலைத் தொடர்புப் பணிகள், சகல விதமான ஆயுதங்களினதும் சூட்டுப்பயிற்சி எனக் கடற்புலிப் போராளி அனைத்தையம் அறிந்தவராக இருக்க வேணடுமென்று கூறப்பட்டது. 'ஏன் அப்படிச் செய்யப்படுகிறது?'.

"நான் முன்னமே குறிப்பிட்டது போல, கடற்சமரில் ஈடுபட்டிருக்கும் போது நாம் தனித்தவர்கள். எமக்கு எவ்வித மேலதிக உதவிகளும் கிட்ட முடியாது. எனவே கடற்சண்டையில் யாராவது உயிரிழக்க நேரிட்டால் அவரது பணியை மற்றவர் பொறுப்பேற்க வேண்டும் இதற்கு அனைவருக்கும் எல்லாம் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது" என்ற விளக்கினார் நிலா. "அத்தகைய நெருககடியான நிலை உங்களுக்கு எப்போ

பெற்றிருந்தமையினாலேயே அவரால் இதனை செய்ய முடிந்தது" என்று

## இந்துசமய அமைப்புகள், ஆலயங்களின் சமகாலப் பிரச்சினைகளை ஆராய விசேட கலந்துரையாடல்

இந்து ஆலயங்களும், இந்து நிறுவனங்களும் எதிர்கொள்ளும் சமகாலப் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல், பலாலி வீதி, கந்தர்மடத்திலுள்ள இந்து சமயப் பேரவைத் தலைமைக் காரியலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறவுள்ளது.

அருட்கவி வீ.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் ஆலய தர்மகர்த்தாக்களையும், பரிபாலன சபையினரையும், இந்து நிறுவனங்களின் பிரமுகர்களையும் கலந்து கொள்ளுமாறும் இராணுவ நடவடிக்கை காரணமாக பூட்டப்பட்ட ஆலயங்களின் தர்மகர்த்தாக்களும், பரிபாலன சபையினரையும் ஆலயங்களின் தற்போதைய நிலைபற்றிய விபரத்துடன் சமுகம் தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# தவில் வாத்தியம் இசைப்பதில் பெண்கள் சளைத்தவர்களல்ல!

**இசை நுணுக்கங்களில் தவில், நாதஸ்வர வாத்தியங்கள் ஆண்களுக்கு மட்டும்தான் உரியவை என்று பெரும்பாலோனார் எண்ணுவது போலன்றி - நாச்சிமார் கோவிலடி "இராஜேஸ்வரி புஸ்பராணி குழுவினரின்" துணிவும் சாதனைகளும் இத்துறை நோக்கிய பெண்களின் கலைப் பிரவேசத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். தவில் வாத்தியக் குழுவைச் சேர்ந்த திருமதி திருச்செல்வம் புஸ்பராணியுடனான நேர் காணல் இது.**



*கேள்வி:உங்களுக்கு இந்த தவில் வாத்தியத்துறையில் எப்படி ஆர்வம் வந்தது?*

*பதில்:*எனது அம்மாவிற்கு இந்தத் துறையில் அதிகமான பற்றுதல் இருந்த காரணத்தினால் தனது பிள்ளைகளை தவில்த்துறை நோக்கி நகர்த்திச் செல்வதில் மிகுந்த ஆர்வமாக இருந்தார். அம்மாவின் இந்த ஆசையையும் ஆர்வத்தையும் நிவர்த்தி செய்யும் பொருட்டும் எங்களிற்கு இயல்பாக இருந்த கலைஞானமும் இந்தத் துறையில் எங்களை மிகவும் பிரபல்யம் பெற வைத்தது என்றுதான் கூற வேண்டும்.

எங்கள் குடும்பத்தைப் பொறுத்த அளவில் நாங்கள் ஒரு கலைக்குடும்பம் என்று எல்லோரும் போற்றுமளவிற்கு-நான் தவில் வாத்தியத்தை நன்கு கற்றுத் தேர்ந்தது போல எனது அக்கா இராஜேஸ்வரி நாதஸ்வரம் வாசிப்பதில் மிகவும் தேர்ந்தவர். எமது குழுவை "இராஜேஸ்வரி புஸ்பராணி குழுவினர்" என்றுதான் எல்லோரும் குறிப்பிட்டு அழைப்பார்கள்.

மேலும் எங்களின் இத்துறை நோக்கிய வளர்ச்சியில் அம்மா காட்டிய ஆர்வமும் அப்பா காட்டிய வழிநடத்தலுமே மிகவும் உந்துதலாக இருந்தது. இப்போது நாங்கள் இவ்வாறு பிரபல்யம் பெற்று வளர்ந்ததில் எனது அம்மாவும் அப்பாவும் போற்றுதற்குரியவர்களே.

*கேள்வி: நீங்கள் எத்தனையாவது வயதில் இத்துறைக்குள் நுழைந்தீர்கள்?*

*பதில்:*நான் ஒரு கலைக்குடும்பத்திற்குள் பிறந்து வளர்ந்ததால், என்னை நான் அறிய முதலே இந்த தவிலைத் தட்டத் தொடங்கினேன்.

இருந்தாலும் சிறு வயதில் நான் மிருதங்கத்தை ஒரு பாடமாக கற்று வந்தேன். இவ்வாறு மிருதங்கம் கற்கும் போது இருந்த ஆர்வம் தவில் வாசிப்பையும் கற்குமளவிற்கு விருத்தி செய்துள்ளது. எனது இந்த தவில் துறைக் குருவாக இணுவில் சின்னராசாவே விளங்கினார். எனது பதினைந்தாவது வயதில் சபாவில் கலந்துகொள்ளுமளவிற்கு எனது தவில் வாத்தியப் பிரவேசம் இருந்தது.

*கேள்வி:இந்தத் துறையைப் பொறுத்தளவில் உங்களது முதல் அரங்க அனுபவம் எப்படி இருந்தது?*

*பதில்:*எனது முதல் அரங்க அனுபவத்தை இப்போது நினைக்கும்போதும் சிரிப்பாகவே இருக்கிறது. பெண்களின் தவில் கச்சேரி என்றால் வழமைக்கு மாறாக சபையில் இரசிகர்கள் கூட்டம் அதிகமாகவே இருக்கும்.

இந்த வகையில் நான் முதன்முதலாக கோவிலில் தான் தவில் சமாவில் கலந்துகொண்டேன். அப்போது எனக்கு மனதில் உள்ளூர ஒரு பதற்றமும், கையில் நடுக்கமும் இருந்தது. இது பொதுவாக எல்லோருக்கும் முதல் அனுபவத்தில் இருப்பது சகஜம்தான். எனினும் எனது இந்தப் பதற்றமும், நடுக்கமும் எனக்கு மட்டுமே தெரியுமளவிற்கு இருந்தது. மற்றவர்கள் இதைக் காணுமளவிற்கு நான் சோர்ந்து போகாமல் சுவாரஸ்யமாக இதைச் செய்வது போன்று சபையோர் நினைக்குமளவிற்கு உற்சாகத்துடனேயே இருப்பதுபோல காட்டிக் கொண்டு சபாவில் திறமையுடன் கலந்து கொண்டேன்.

*கேள்வி: நீங்கள் ஒரு பெண் தவில் வித்தகர் என்ற வகையில் உங்கள் நிகழ்ச்சிகளை வரையறுத்துள்ளீர்களா?*

*பதில்:* எமது இந்தத் துறைக்கு எந்தவித வரையறைகளும் இல்லை. அதை நான் விரும்பவுமில்லை. எனக்கு இதில் மிகுந்த ஆர்வமும், தேர்ச்சியும் இருக்கிறபடியால் ஒரு நாளைக்கு 4,5 சபாவில் கூட கலந்துகொள்வேன்.

இது ஒரு பருவகால உழைப்பானபடியால் அந்தக் காலத்தில் எமது தேவைகளும் நிறைவாகவே காணப்பட்டதால் அதற்குரியவாறு நேரங்களை வகுத்துக் கூடிய அளவில் ஒழுங்கு செய்யும் கச்சேரிகள் அனைத்திலும் கலந்து கொள்வேன்.

தனியாக கோயிலோடு மட்டும் நின்றுவிடாது, பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வேன். இது ஒரு மங்களகரமான வாத்திய நிகழ்வு என்பதால் பரந்துபட்ட இன, மதத்தவர்களும் இக்கலையை ஏற்றுக்கொள்வதில் நான் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வேன்.

*கேள்வி: இத்துறையைப் பொறுத்தளவில் ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் சாதனை புரியலாம் என நினைக்கிறீர்களா?*

*பதில்:*நிச்சயமாக பெண்களால் முடியும் என்றுதான் கூறவேண்டும்.

இந்தத் துறை சில குடும்பங்களோடு பாரம்பரிய ரீதியாக வளரும்போது இசை நுணுக்கங்கள் இயல்பாகவும், சாஸ்திரிய ரீதியாகவும் வளர்ச்சி பெறுமென்பது அனுபவ ரீதியான உண்மை. ஆனாலும் பெண்கள் இந்தத் துறையில் பிரவேசிப்பது மிகவும் குறைவாகவே உள்ளது. இசை ஞானமும், ஆர்வமும் மனத்துணிவும், விடாமுயற்சியும் இருந்தால் பெண்களும் சாதனை புரியலாம். எனது விருப்பமும் அதுதான்.

*கேள்வி: தவில் கச்சேரிக்காக நீங்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டீர்களா? அது பற்றிய உங்களது வர்ணனைகள்.*

*பதில்:* ஆம். சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களிற்கு சென்றுள்ளேன்.

மலேசியா சிறம்பான் புக்கித்திம்போ மாரியம்மன் ஆலயம், சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயம், கோலாலம்பூர் பால தண்டாயுதபாணி ஆலயம்· ஆகியவற்றிற்கு சென்று தவில் கச்சேரியில் பங்கு பற்றியதுடன் மலேசியாவில் நடைபெற்ற "அன்னையர் தினம்" (**mother's day**) நிகழ்ச்சியில் பல வெளியூர் கலைஞர்களுடன் இணைந்து கச்சேரி நடாத்தும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அதற்காக உயர்ஸ்தானிகராலயத்தில் பணியாற்றும் வெளிநாட்டுப் பெண்ணொருவரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டேன்.

வெளிநாட்டவர்களைப் பொறுத்த அளவில் அவர்கள் மேற்கத்தைய இசைக்கருவிகளை கற்றாலும் எமது கீழைத்தேய தவில் கச்சேரிகளை ரசிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளார்கள் என்பது நான் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட போது அனுபவரீதியாகக் கண்ட உண்மை. அவர்கள் என்னுடன் கதைப்பதற்கு மொழி பிரச்சினையாக இருந்தாலும் புன்முறுவலுடன் கைகுலுக்கி வாழ்த்தியது என்னை மிகவும் உற்சாகப்படுத்தியது. இவை தவிர இலங்கையிலும் பல இடங்களிற்குச் சென்று தவில் கச்சேரியில் பங்குபற்றியுள்ளேன்.



*கேள்வி:- கலைத்துறை பெற்றுத்தந்த மறக்கமுடியாத அனுபவங்கள் பற்றி..?*

*பதில்:-* இந்தியாவுக்கு கலைத் துறையுடனான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோது நடிகர் திலகம் சிவாஜி கணேசனைச் சந்தித்துக் கதைக்கும் வாய்ப்புக் கிடைத்ததும் - இந்தத் துறையில் பெண்கள் கூடியளவு பங்களிப்புச் செய்து அவர்கள் மத்தியில் இந்த தவில் கச்சேரியை விரிவுபடுத்த வேண்டும் எனக் கூறி என்னை வாழ்த்தியதும், எனது வாழ்க்கையில் இடம்பெற்ற ஒரு வரலாற்றுப் பதிவு என்ற வகையில் அதனை மறக்க முடியாது. இப்படியான வாய்ப்புக்கள் எல் லோருக்கும் கிடைப்பதில்லை என்ற வகை யில் நான் பெருமைப்படுகின்றேன்.

*கேள்வி:- இந்த தவில் வாத்தியத்தில் பெண்களின் பங்களிப்புக் குறைவாக இருப்பது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?*

*பதில்:-* பெண்கள் என்ற ரீதியில் இதனைக் கற்றுக்கொள்வதில் பின்னிற்கிறார்கள். சிலருக்கு ஆர்வம் இருந்தாலும் இதன் நுணுக்கங்களையும் வித்தியாசமான சங்கதிகளையும் கற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும். ஆனாலும் சோர்வடையாது விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் கற்றுக்கொள்ளலாம்.

தற்போது நவீன காலத்திற்கேற்றவாறு, மாறுபட்டு வளரும் சமூக அமைப்பிற்கு ஏற்றவாறு, பெண்கள் மேலைத்தேய இசைகளையும், இசைக்கருவிகளையும் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதனால் இந்த தவில் வாத்தியத்தில் பெண்களின் ஈடுபாடு குறைவாகவே இருக்கிறது. எனவே இதனைக் கற்றுப் பெண்கள் மத்தியில் இந்த தவில் வாத்தியக் கச்சேரியைப் பேணிப்பாதுகாக்க கலைக்குடும்பங்கள் முன்வரவேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்.

*கேள்வி:- திருமணத்திற்கு பின்னரும் தொடர்ந்து தவில் கச்சேரிகளை நடத்துவதில் உங்கள் குடும்பத்தினரின் பங்களிப்பு எப்படி இருக்கின்றது?*

*பதில்:-* எனது குடும்பத்தினரின் பூரண ஒத்துழைப்பு இருக்கின்றது. கணவன் இந்தத்துறையில் ஈடுபடாவிட்டாலும் அவருக்கு இருக்கின்ற மிகுந்த ஆர்வம் என்னையும் பிள்ளைகளையும் உற்சாகப்படுத்தியது. எனக்கு இருவரும் ஆண்பிள்ளைகள்தான். அவர்கள் பாடசாலைக் கல்வியோடு நின்று விடாது நாதஸ்வரம் வாசிப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, என்னுடன் வெளியூர் கச்சேரிகளில் பங்குபற்றி இருக்கின்றார்கள். எனக்கு ஒரு பெண்பிள்ளை இருந்திருந்தால் நிச்சயமாக என்னைப்போல் இந்தக் கலைத்துறையில் வளர்த்திருப்பேன்.

காலையில் நேரத்துடனேயே சேவகத்திற்கு செல்ல வேண்டியிருந்தால் எல்லோரும் சேர்ந்தே வீட்டு வேலைகளைச் செய்து முடிப்போம். இந்த வகையில் எனது வேலைகளில் அவர்களும் பங்கேற்றுச் செய்வது எனது தவில் கச்சேரிக்கு அவர்கள் கொடுக்கும் பூரண ஆதரவு.


இந்த கலைத்தொழிலுக்கு ஒரு தனியான மதிப்பு இருப்பதனால் நான் இதனைப் பின்பற்றுவதில் பெருமைப் படுகிறேன்.

**● நேர்காணல்- கலா, உஷா**



## சிநேகிதியே..

## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






சிந்தி,

உனது கடிதம் கிடைத்தது. உனது எதிர்வீட்டு அக்காவும் அவரது தோழியரும் எனது கடிதத்தைக் கடுமையாக விமர்சித்ததாக எழுதியிருந்தாய். அழகாக அலங்கரிக்கும் கலையை தேவையற்றதென நான் கூறுவது தவறு என அவர்கள் கூறுகிறார்களென உன் கடிதம் தெரிவித்தது.

எனது கருத்து உனக்குப் புரிந்திருக்க வேண்டுமே. தித்திப்புக்கூட அதிகமானால் திகட்டும். அதுபோன்றே அளவிற்கதிகமாக அணிகலன்கள் அணிவதும் அமையுமென்று, விளக்கம் கொடுத்து அவர்களை அதை ஒப்புக்கொள்ளச் செய்திருக்க வேண்டும். அதிலேதான் வெற்றி தங்கியிருக்கிறது.

அவர்களுக்கு மற்றுமொரு ஆலோசனையையும் கூறுவது முக்கியம். இப்படிக் கூடியிருந்து கதைப்பதைக் குறைத்து, அழகியல் கலைகளான ஆடைதயாரித்தல், அழகுப் பொருட்கள் தயாரித்தல், பூந்தோட்டம், காய்கறித்தோட்டம் என்பன அமைத்தல் என்று பொழுதை பயனுள்ளதாகக் கழிக்க நாம் பழக வேண்டுமென்று கூறு.

பெண்களோ ஆண்களோ கூடியிருந்து தேவையற்ற விடயங்களைப் பேசி நேரத்தை வீணாக்குவதால் நேரம் வீணே விரயமாவதுடன், எத்தனையோ பிரச்சினைகள் உருவாகுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மேலும் கூடியிருந்து ஒவ்வொரு வீட்டு விடயங்களையும் அலசி ஆராய்ந்து உண்மையற்ற வதந்திகளைப் பரப்பி, புறங்கூறி, மற்றவர்களை வேதனைப்படுத்தி, பகையையும் பிரச்சினைகள் சண்டைகளையுங்கூட உருவாக்கி விடுகின்றனர்.

சிந்தி, இப்படிப்பட்ட உரையாடல்கள் அவசியந்தானா? சமைப்பது, சாப்பிடுவது அல்லது எந்த வேலையுமே இல்லாது உண்பது, உறங்குவது போக ஏனைய நேரங்களில் ஊர் வம்பு தேடி அலையும் பலரை நாம் பார்க்கிறோம்.

நாட்டைச் சீரழிப்பவர்களுள் இவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இவர்கள், தாம் பயனுள்ளவர்களாக இன்று முதல் மாறுவதென்று சபதமெடுத்துக் கொள்ள வேண்டும். பயன் நல்கும் பணிகள் பலவுண்டே. அவற்றுள் ஏதாவது ஒன்றிரண்டையாவது செய்யலாமே.

இடையிடையே நாம் சந்திக்க வேண்டும், பேச வேண்டுந்தான். அப்படி அளவளாவும் போதும், ஊர்வம்பு பேசுவதைத் தவிர்க்க வேண்டும். நல்லதை மட்டும் பேசி, அல்லதை விட்டு விட வேண்டும்.

சிந்திக்க வேண்டிய ஆக்கபூர்வமான எத்தனையோ விடயங்கள் உண்டே. ஒரே துறையைச் சேர்ந்தவர்கள் சந்தித்தால் துறை சார்ந்த விடயங்களை அலசி ஆராயலாம். நூல்களைப் பற்றி விமரிசிக்கலாம். கலை நிகழ்வுகள், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி உரையாடலாம்.

எமது உறவினர் நண்பர்கள் பற்றி உரையாடவே கூடாதென்று நான் கூற வரவில்லை. தேவையற்றவற்றை, பலரும் பேசுவதால் மனம் வேதனைப்படக் கூடியவற்றை தவிர்க்க வேண்டும்.

சிலவற்றை முற்போக்கான கருத்துக்களைக் கூறி சூழ இருப்பவர்களின் சிந்தனையையே மாற்றலாம். உதாரணமாக தெரிந்தவருக்கு நடந்த பாலியல் வல்லுறவு பற்றி பேச நேரிடும் போது, அதனால் பாதிக்கப்பட்டது ஒரு விபத்து. குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும். காறி உமிழ வேண்டியது அவன் மீதேயன்றி அவள் மீதல்ல என்பதை வலியுறுத்தலாம்.

மல்லிகையும் மருக்கொழுந்தும் இருந்து சென்ற இடத்தை நறுமணங்கமழச் செய்வது போல நாம் சில நிமிடங்களிலிருந்து பேசிச் செல்லுமிடமும் இருக்க வேண்டும். முன் வீட்டுக் கூட்டம் இப்போது எப்படியென்று எழுது.

அன்புள்ள,

யோசி.

# கவிதைச்சோலை

## சிந்திக்க வேண்டும், சிநேகிதியே!

சிநேகிதியே,
வீழ்ந்து கிடக்காதே, எழுந்து நட
பனியில் நனைந்து கிடக்கும்
நம் தேசப்பாதை ~ உன்
பாதச்சூடு பட்டு உஷ்ணமாகட்டும்

உன் சிந்தனைப் பறவையை
சிறகடிக்க விடு ~ அது
மூடநம்பிக்கைகளை
கொத்தி விரட்டட்டும்



உன் அறிவு ஜோதியைத்
தூக்கி நிறுத்து ~ அது
நாளைய விடிவுக்கு
ஒளி காட்டும்

சரித்திரத்தைச் சலவைசெய்
நீ அடிக்கிற அடியில்
இறந்தகால அழுக்குகளும்
சலவை செய்யப்படட்டும்

சிந்திக்க வேண்டும் சிநேகிதியே
இனி நம் பகலுக்கு சூரிய வெளிச்சம்
மட்டும் போதாது ~ ஞாலம்
துலங்க ஞானதீபம் ஏற்ற வேண்டும்
அதற்கு உன் கரங்களிரண்டும்
கட்டாயம் வேண்டும்.

*~ விஜயா பிரான்சிஸ்*
*யாழ்ப்பாணம்.*

## வாழ்க்கை

**உலகம் ஒரு பொய்**
**வாழும் மனிதன் பாவம்**
**பணம் இருக்கும் போது**
**பாசம் பொழியும்**
**பண்பு போல் தெரியும்**
**அழகு உள்ளவரை போற்றும்**
**அது போன பின்பே தூற்றும்**
**காதல் காதல் எனக் கவிபாடும்**
**கற்பனையில் நாளும் மூழ்கும்**
**கசந்து விட்டால் கவலையினால் வாடும்**
**வாழ்க்கை புரியவில்லை**
**வாழ்வதும் நிலைத்ததில்லை**
**தொடக்கம் தெரியவில்லை**
**தொலைந்துவிட்ட இரகசியமாம்**
**முடிவு தெரியவில்லை**
**விடை தெரியா வினாவாக**
**கேள்விக் குறியோடு**
**வலுவிழந்து தவிக்கின்றது.**

*சு.சுகதினி,*
*இணுவில்.*

## துள்ளியெழு தோழி....!

விஞ்ஞானம் தன்னால் விதம்விதமாய்
விந்தைகள் விளங்குது வெளியில்
கொஞ்சமேனும் சுரணையற்று
பழமையுடை போர்த்திக் கொண்டு
அஞ்ஞான வசப்பட்டு அகப்பையுடன்
அடுக்களையில் நீ கிடப்பதேன் தோழி



பிறப்பெடுத்த நாள் முதல் அடிமையெனச்
சின்னமிட்டுச் சிற்றறிவாளர் சிலர்
தரப்படுத்த ஆட்பட்டு நீயடங்கித்
தாழ்வு நிலை எய்தல் தகுமோ...!
உரப்பட்டு உன்மனது அடிமை விலங்(கு)
உடைத்துப் புறப்படுவதெக்காலம்?

தாலியை வேலியென நீ நினைக்க
சில வேலிகள் பயிரை மேய்தல் செய்குதே
காலிகள் அவற்றைக் களைந்தெடுக்க
கலிகாலத் துர்க்கையாய் நீ மாறி
சேலை கட்டிய பொம்மையல்ல நீ யொரு
புயலென மற்றவர்க்கு புரிய வைத்திடு!

**நா.கீர்த்தனா**

# அழகும் அலங்காரமும்!

**- திருமதி யோகினி சண்முகநாதன்.**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



அழகு என்பது என்ன என்பதின் சிறிய விளக்கம் போனவாரம் கொடுத்திருந்தேன். ஒருவரது நடை, உடை, பாவனைகள் அவர்களது அங்க அவயங்கள் இப்படி, இயற்கை நம் எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் அழகை தந்திருக்கிறது. அகன்ற கண், வரிசையான பற்கள், அழகான முகம், பளபளப்பான மேனி, கட்டுக் கோப்பான உடல், இந்த வரிசையில் ஒரு பெண்ணின் அலங்காரத்திற்கு மகுடம் போன்றது கூந்தல் அலங்காரம். நீண்ட கூந்தல்தான் பெண்களுக்கு அழகானது என்று சிலர் நினைப்பது அவ்வளவு சரியல்ல. கூந்தலின் தன்மை அனேகமாக பரம்பரையைப் பொறுத்தது. குட்டையான கூந்தல் கூட சிலருக்கு அற்புதமான தோற்றத்தைத் தரும். கூந்தலைப் பற்றிய பொதுவான பிரச்சினை முடி கொட்டுதல், பொடுகு, பேன், நுனிமுடி பிரிதல் இப்படி ஏதாவது குறைகள் இருக்கும். இக்குறைகளை நீக்க கூந்தலைப் பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியம். வாரத்திற்கு இரண்டு முறையாவது கூந்தலைச் சுத்தமாகக் கழுவிக் கொள்வது மிகவும் அவசியம். மூலிகைச் சிகிச்சைகள் மூலமும் நல்ல **Shampoo** குளியலும் கூந்தலை மிகவும் மிருதுவானதாக மாற்ற உதவும். சத்துள்ள உணவு வகைகளும், பச்சைக் காய்களும், முட்டை, இரும்புச் சத்துள்ள உணவு, விற்றமின் சி சேர்ந்த பழவகைகள், கூந்தல் பராமரிப்புக்கு அத்தியவாசியமானது. தலைமுடி சரியாகப் பாதுகாக்காவிட்டாலும் (பொடுகு, பேன் முதலியன), உடல் ஆரோக்கியம் சரியாக இல்லாவிட்டாலும், ஈரமான தலையில் சீப்புப் போடுவதாலும், கவலை, மனவேதனை கூட முடி உதிர்வதற்கு காரணம் ஆகின்றது. முக்கியமாக ஒவ்வொருவரும் தமக்கென சுத்தமான சீப்பு, 'பிறஷ்' வைத்திருப்பது மிகமிக அவசியம். ஒருவர் இழுத்த சீப்பை மற்றொருவர் உபயோகிக்கக் கூடாது. தலைக்கு உபயோகிக்கும் 'ரவலை' உடம்பிற்கு ஒருபோதும் உபயோகிக்கக் கூடாது. தலையணையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இப்படியான சிறிய விஷயங்களில் கூட சிலர் கவனயீனமாக இருப்பதனால் கூந்தலை பராமரிக்கத் தவறிவிடுகிறார்கள். முக்கியமாக தலையில் பொடுகு என்பது மிகவும் ஒரு பிரச்சினையான விடயம். தலையில் பொடுகு இருப்பவர்களுக்கு முகத்தில் பருக்கள் வருவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. பொடுகு உள்ளவர்கள் தலையில் குளிக்கும்போது தலையில் ஊற்றும் தண்ணீர் முகத்திற்கு வராமல் தலையைப் பின்புறமாகச் சாய்த்துக் கொண்டு அலசவேண்டும். பொடுகை அகற்ற தனியாக நல்ல மூலிகை சம்போக்கள் இப்போது கிடைக்கிறது. பொடுகை அகற்ற மூலிகைச் சிகிச்சைகளும் பெரிதும் நன்மையளிக்கின்றன.

சாதாரண கூந்தல் (**Normal Hair**) உள்ளவர்களுக்கு அனேகமாக பெரிய பிரச்சினைகள் வருவதில்லை. சாதாரணமாக கவனம் எடுத்து கூந்தலைப் பராமரிப்பதால் நல்ல பலன் கிடைக்கும்.



எண்ணெய் பசையுள்ள கூந்தல் (**Greasy Hair**) இவர்கள் அடிக்கடி சம்போ அல்லது சீயாக்காய் போட்டு கூந்தலை கவனிக்க வேண்டும். அல்லது எண்ணெய் பசையினால் அழுக்கு சேர்ந்து தலைமுடி கொட்டும். இதற்கு எலும்பிச்சைச் **Shampoo** மிகவும் நல்லது. வினாகிரியில் தண்ணீர் சேர்த்து தலையில் போட்டு தேய்த்து தலைமுடியைக் கழுவலாம். எண்ணெய் உணவுகளைத் தவிர்த்து பச்சைக்காய்கறிகளும் நிறையத் தண்ணீரும் குடிக்கவேண்டும்.

உலர்ந்த கூந்தல் (**Dry Hair**) இதற்கு **Conditioner** போடுவது மிகவும் அவசியமானது. **Conditioner** என்பது கூந்தலுக்கான டானிக் (**Tonic**). இது போட்டால் கூந்தல் நன்றாக படிந்து பரட்டை இல்லாமல் மிகவும் பளபளப்பாகவும் மென்மையாகவும் கூந்தல் இருக்கும். எண்ணெய்ப் பசை உடைய உலர்ந்த கூந்தல் (**Greasy Dry Hair**) இவர்களுக்கு கொஞ்சம் தொல்லை உண்டு. தலை மிகவும் அரிக்கும். இடைக்கிடை எண்ணெய் மசாஜ் செய்து **Shampoo** போட்டு **Conditioner** போட வேண்டும்.

இளநரை இதுவும் சாதாரணமாக சில பெண்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையாகவுள்ளது. 40 வயதுக்கு மேல் அநேகம் நரை தோன்றுவது உண்டு. ஆனால் இப்போது இளம் வயதிலேயே சிலருக்கு நரை தோன்ற ஆரம்பிக்கின்றது. விற்றமின் **B**-12 நரையைப் போக்க பெரிதும் உதவுகின்றது. இதனை உணவில் உட்கொள்வதாய் இருந்தால், தவிடு அடங்கிய உணவின் **B**-12 அடங்கியுள்ளது.

கூந்தல் பராமரிப்பில் கவனமாக இருந்த பின்னர் முகத்திற்கு ஏற்றவாறு அதை அலங்கரிப்பது முக்கியமான விடயம். அவர் அவர் முகத்திற்கு ஏற்றவாறு மிகப் பொருத்தமான கூந்தல் அலங்காரம் கவர்ச்சியான தோற்றத்தைக் கொடுக்கும். அழகிய கூந்தல் அலங்காரம் முகம் மற்றும் தோற்றத்தில் குறைபாடுகள் இருப்பினும் அதை நிவர்த்தி செய்கின்ற அற்புதமான அழகுடன் தோற்றமளிக்க முடியும்.

(தொடரும்)


# சிறந்தவை இவை






| | | |
|---|---|---|
| சிறந்த ஆசிரியர் | - | அனுபவம் |
| சிறந்த புத்தகம் | - | வாழ்க்கை |
| சிறந்த படிப்பு | - | பொறுமை |
| சிறந்த நண்பன் | - | புகழ் |
| சிறந்த ஆட்டம் | - | கடமை |
| சிறந்த உணவு | - | சிந்தனை |
| சிறந்த அணிகலன் | - | புன்னகை |
| சிறந்த பாதுகாப்பு | - | நேர்மை |
| சிறந்த ஊட்டம் | - | கல்வி |
| சிறந்த பண்பு | - | நன்றி |
| சிறந்த பொழுதுபோக்கு | - | சேவை |
| சிறந்த மதம் | - | சமத்துவம் |
| சிறந்த உறவு | - | மனிதகுலம் |





**- க.சாந்தினி.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்

- திருக்குறள்-

# நமது நோக்கு

## மீண்டும் மேட்டுக்குடிக் கல்விப் பாரம்பரியமா?

வடக்கு, கிழக்குப் பகுதியில் கல்வித்துறையானது மிகப் பெருமளவில் யுத்தத்தால் பாதிப்படைந்து காணப் படுகின்றது.

அடிப்படைக் கற்றலுக்கான வசதிகளின்றி, ஆசிரியர்க ளின்றி, தகுந்த கட்டடங்களின்றி, கற்றல் உபகரணங் களின்றி அல்லற்படும் ஆயிரக்கணக்கான மாணவர்கள்- இன்றும் எமது மண்ணில் தமது கற்றலைத் தொடர்ந்து வருகின்றனர்.

வன்னிப் பகுதியிலும், யாழ்.குடாநாட்டின் வடமராட்சி கிழக்கு, தீவகம் மற்றும் கிராமப்புறப் பாடசாலைகளிலும்- இன்றும் மரநிழல்களில் தரையிலமர்ந்து கல்வி கற்கின்ற பரிதாப நிலையில் மாணவர்கள் உள்ளனர்.

உலகமே கணினியைப் பற்றிப் பேசும்போது - கணினியைத் தொட்டுக் கூடப் பார்த்திராத அவலச் சூழலில், வாய்ப்பற்றவர்களாக வாழ்ந்து வரும் சிறார்களும் எம் மண்ணில் உள்ளனர்.

இத்தகைய பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமக்கான மிக அடிப்படையான கல்வி வசதிகளைப் பெறுவதற்கே காலங்காலமாய்க் காத்திருக்கும் நிலையில்-

பொருளாதாரப் பலம் படைத்தவர்களுக்கு மட்டுமே பயன்தரக் கூடியதான திட்டமொன்று 'சர்வதேச பாட சாலைகளாக' உள்நுழையப் போவதான செய்திகள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

'சர்வதேசப் பாடசாலைகள்' ஆங்கிலக்கல்வியின் முன்னேற்றத்தில் மிகப் பெரும் பங்காற்றும் என்ற உண்மை ஒரு புறமிருக்க -

போரினால் சிதைந்து போயுள்ள சமூகத்திலிருந்து எவரெவர் இத்தகைய பாடசாலைகளால் பயன் பெறப் போகின்றனர் என்ற கேள்வி மிகப் பலமாய் எழுகின்றது.

ஏனெனில், கொழும்பை மையமாக வைத்து எழுந் துள்ள சர்வதேசப் பாடசாலைகள் - மேட்டுக்குடி மக்க ளுக்கேயான பாடசாலைகளாகவே இன்று கருதப்படு கின்றன.

அங்கு - மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கில் ஊதியம் பெறுபவர்களின் பிள்ளைகள் மட்டுமே, அவற்றில் உள்நுழையும் அனுமதியைப் பெறுகின்றனர்.

இவ்வாறானதொரு - 'செல்வந்தப் பாடசாலைகள்' யாழ்.மண்ணில் உருவாக்கப்படும்போது, யார் இவற்றில் அனுமதி பெறத் தகுதியுடையோர்? என ஆராய வேண்டிய அவசியமுள்ளது.

கண்முன்னாலேயே ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமக்கான அடிப்படை வசதிகளின்றி இலவசக் கல்வி யொன்றினாலேயே தமது கற்றலைத் தொடரும் நிலை யில்- மீண்டும் 'மேட்டுக்குடிக் கல்விப் பாரம்பரியம்' ஒன்று உருவாக்கப்படுவதற்கான முயற்சியாக இது அமைந்து விடுமோ என்ற சந்தேகம் மக்களிடையே எழுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலமும் பேசவல்ல தொடர் பாடல் திறன்மிக்க, தலைமைத்துவப் பண்புமிக்க, தொழில்சார் தகைமையுள்ள மாணவர்களை உரு வாக்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளதை யாரும் மறுக்க முடியாது.

எமது மண்ணையும் மக்களையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு - வலுமிகுந்த, கல் வியறிவு மிக்க இளம் சமுதாயம் ஒன்றின் அவசியத்தை எவரும் இல்லையென்று வாதிடவும் முடியாது.

ஆனால் அத்தகையதொரு, சக்தி மிகுந்த மாணவர் களை, சமூகத்தின் மேட்டுக்குடியிலிருந்து மட்டும் பெற்றுவிடலாமென்று கருதினால், அது ஏராளம் ஏழை மாணவர்களின் எதிர்காலத்தையே பாழடித்துவிடக் கூடி யதாக இருக்கும்.

கல்விச்சீர்திருத்தங்கள் மூலமும், ஒருங்கிணைந்த வளப்பகிர்வு மூலமும், சமூகத்தின் சகல தரப்பினரையும் அபிவிருத்தி நோக்கிய பாதையில் அரவணைத்துச் செல்ல வேண்டிய நிலையில் - தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளியற் பலத்தின் மூலம், சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளலாம் என்ற குறுகிய நோக் கத்தை விட்டொழிக்க வேண்டும்.

எமது தேசத்தின் வளர்ச்சி நோக்கிய பாதை - பரந்ததாக, சமத்துவமானதாக, மக்கள் அனைவ ருக்குமேயானதாக அமைய வேண்டுமேயன்றி - வெளி நாட்டு உதவிகளின் பேரிலான, சர்வதேச அமைப்புக்க ளின் நிபந்தனைகளின் வழியிலான - 'தேர்ந்தெடுக் கப்படுவோரின் வளர்ச்சியை' நோக்காகவோ, சமூக இடைவெளியை அதிகரித்துச் செல்வதாகவோ, சிந்தனா சக்தியைத் தக்கவைத்திருக்கும் தாய்மொழி வழிக் கல்வியின் முக்கியத்துவத்தை குறைத்து விடுவதாகவோ இருப்பது - மெய்யான அபிவிருத்தியைக் குறிக்காது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## வடமராட்சி கிழக்கில் எடுக்கப்பட்ட இயற்கை வளங்கள் தொடர்பான படங்களை அழித்த படையினர்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன், குடத்தனை, மணற்காடு பகுதிகளிலுள்ள இயற்கை வளங்களைப் படம் பிடித்த ஒளிப்பதிவு நாடாவைத் தம்முன்னிலையில் அழிக்குமாறு படையினர் பணித்ததாக இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சங்கத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இயற்கை வளங்களைப் ஒளிப்பதிவு செய்து ஆவணப் படுத்தும் நோக்குடன் நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்தினர் படம் பிடித்த போது அப் பகுதிக்கு வந்த குடத்தனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி - சங்கத்தின் தலைவர், செயலாளர், படப்பிடிப்பாளர் ஆகியோரை அழைத்து அப் பகுதியில் படம் பிடிக்கத் தடை விதித்ததுடன் ஒளிப்பதிவு நாடாவையும் அழித்துள்ளனர். இதனால் தமக்கு 10 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடாத்தி குறிப்பிட்ட பகுதிகளில் படம் பிடிக்க அனுமதி பெற்றுத் தருமாறு, சங்கத்தினர் - யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரியுள்ளதுடன் அரசாங்க அதிபர், விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (23)

## அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடங்கள் அழிக்கப்படும்

**- மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு -**

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல் லைக்குள் அனுமதியின்றிக் கட்டடம் அமைத்தால் அவற்றை அழிபபதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேசசபைத் தலைவர் வெ.அ.ஜோண்சன் தெரிவித்துள்ளார்.

பிரதேசசபை எல்லைக்குள் அனுமதியின்றி கடைகளோ, வீடுகளோ கட்ட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

இதற்கென பிரதேசசபைச் சட்டத்தின் கீழுள்ள பொருத் தமான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து விண்ணப்பிப்பவர்களுக்கே கட்டடம் அமைக்க அனுமதி அளிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (100)

## பருத்தித்துறைக் கடலில் மீனவரின் வலையில் சிக்கிய மர்மப் பொருள்

(புலோலி)

பருத்தித்துறை கடலில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற மீனவர்களால் கடற்பரப்பில் இருந்து மர்மப்பொருள் ஒன்று மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் தொழிலுக்காகச் சென்ற மீனவர்களால் நடுக்கடலில் வீசப்பட்ட வலையில் குறிப்பிட்ட மர்மப்பொருள் சிக்கியது. இதனைக் கரைக்குக் கொண்டுவரும்போது அவதானித்த காவலரணில் இருந்த படையினரால் கடற்படை யினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதிக்கு வந்த கடற்படையினர்- சிவப்பு நிறமுடைய 3 அடி உயரமானதுமான பொருளொன்றை மீட்டுச சென்றனர். இந்த மர்மப்பொருளில் வயர்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் ஆங்கிலத்தில் '**Made in Chennai**' என எழுதப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின் றது. (15)

## சுயாதீன ஆணைக்குழுக்களில் மலையகத் தமிழருக்கு இடமில்லை!

**ஜனாதிபதி, பிரதமருக்கு தொண்டமான் அவசர கடிதம்**

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்களின் 39 உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு வர் கூட இந்திய வம்சாவழி தமிழர்கள் இல்லை என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனது இந்தக் துணைக்குழுக்களின் இந்திய வம்சாவழி பிரதி நிதிகளும் இடம்பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அவர் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோ ருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

17ஆவது யாப்பின் அரசியல் சட்டதிருத்தத்தின்படி 3 சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். ஆனால் அதில் ஒருவர்கூட இந்திய வம்சாவழிப் பிரதிநிதி கள் இல்லையென்று அவர் கூறியிருக்கின்றார்.

## சேந்தாங்குளத்திலிருந்து இடம் பெயர்ந்த 19 குடும்பங்களுக்கு இளவாலையில் வீடுகள் அமைப்பு!

(இளவாலை)

வலி.வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தற் போது மீளக் குடியமர்ந்துள்ள சேந்தாங்குள கிராமத்தைச் சேர்ந்த 19 குடும்பங்களுக்கும் இளவாலை சீந்திப் பந்தல் பகுதியைச் சேர்ந்த 6 குடும்பங்களுக்கும் 25 வீடுகள் யு.என். எச்.சி.ஆரினால் கட்டிக்கொடுக்கப்பட இருக்கின்றது.

சேந்தாங்குளம் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளடக கப்பட்டுள்ளதால், இவ்வீடுகள் சீந்திப் பந்தல் பகுதியில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (41)

## வேட்டைக்குச் சென்றவரை ஆக்ரோஷமாக தாக்கிய பன்றி

(யாழ்ப்பாணம்)

பன்றி வேட்டைக்கு கோஷ்டியாகச் சென்ற இளைஞர் களில் ஒருவர் பன்றியின் ஆக்ரோஷக் கடியில் சிக்கிப் படுகாயமடைந்த சம்பவம் ஒன்று சமீபத்தில் தச்சன் தோப்புப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது:- சம்பவதினம் பகல் வேளை நீர்வேலியிலிருந்து பிரஸ்தாபக் கோஷ்டி தச்சன்தோப்பு வயல்வெளிப் பகுதிக்குச் சென்றது. அப்போது அவர்கள் சற்றும் எதிர்பாராத வகையில் திடீரென மறைவிடம் ஒன்றிலிருந்து வந்த பன்றி ஒன்று கே.ரட்ணசிங்கம் (வயது 40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையைக் கோரமாகக் கடித்துக் குதறியது. இதனால் அவரது தொடைப்பகுதியில் பாரிய காயம் ஏற்பட்டது.

உடன் கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு அவசர சிகிச்சை அளிக்கப் பட்டது. (10)

## கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மீளக்குடியேறியோருக்கு உதவி

(கோப்பாய்)

வன்னியில் இருந்து அண்மைக் காலத்தில் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குடியேறிய குடும்பங்களிற்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் உலர் உணவு அல்லாத பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு ஆகிய பிரதேசங்களில் வாழும் வன்னியில் இருந்து வந்த குடும்பங்களுக்கு தம்பாலை- கதிரிப்பாய் கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து இப்பொருட்கள் வழங்கப்படவுள்ளன. (80)

## வவுனியா வளாக கல்வியியல் டிப்ளோமா நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா வளாக கல்வியியல் டிப்ளோமாவிற்கு தெரிவுசெய்யப்பட்டு நேர்முகத்தேர்வுக்கு அழைக் கப்பட்டுள்ளோரின் விபரம் வெளியாகியுள்ளது. கீழ்வரும் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைவரையும் புதன்கிழமை காலை 11 மணிக்கு வவுனியா வளாகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அ.அருளானந்தம், அருட்சகோதரி எஸ்.பஸ்தியாம் பிள்ளை, அ.டன்சன் ராஜ்குமார், கே.ஏரம்பநாதன், எம்.ஏரம்பநாதன், எஸ்.ஜெயகுகன், எஸ்.ஜெயகாந்தன், கே.ஜெயரத்ன, ஜே.ஜூலன்குமார், எஸ்.கந்தையா, ஆர்.கங் கேஸ்வரன், எம்.ஜெயகெனடி, ஆர்.கோகுலதாஸ், பி.கிருஷ் ணகுமார், எஸ்.குகானந்தன், கே.குலசேகரம், எஸ்.குருகு லசிங்கம், எம்.மகேந்திரன், ரி.மனோகரன், ரி.மனோராஜ், எம்.முகுந்தன், ஏ.பரமசாமி, எஸ்.பிரபாகரன், கே.எஸ்.பிரபா கரன், வி.புஸ்பராசன், எஸ்.இராமதாஸ், எஸ்.ரணேஷ், என்.சக்திவேல், பி.சத்தியபாஸ்கரன், எஸ்.சற்குணேஸ்வரன், அருட்சகோதரி ஏ.செபஸ்தியாம்பிள்ளை, செல்லத்துரை கனகாம்பிகை, ரி.செல்வமுரளி, வை.செந்தில்ராஜ், ரி.செந் தூரன், ரி.சிவஞானம், எஸ்.சசிகரன், எம்.சிவநாதன், ஜெ. சிப்ளி, ஏ.சோதிநாதன், எஸ்.சிறிரங்கநாதன், எம்.சுபாஷ், ரி.சுகந்தன், எஸ்.தனபாலசிங்கம், ஆர்.தங்கேஸ்வரன், எஸ்.தர்மலிங்கம், கே.தவசீலன், கே.திருக்குமரன், ரி.உதய குமார், ரி.உதயசூரியன், ரி.வசந்தன், பி.வேலுப்பிள்ளை, ரி.விநாயகமூர்த்தி, பி.விஸ்வநாதன், எஸ்.கந்தசாமி, எஸ்.இரு தயராஜா குரூஸ், எஸ்.சிவனேஸ்வரன். ஆர்.நாகேஸ்வரன், ஏ.ஆர்.தசகுமாரன் ஆகியோரே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

# மனித ஆத்மாவோடு பேசுகின்ற ஒரு கலைவடிவமே இசை!

ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ள இசையமைப்பாளர் இசைத் தென்றல் யேசுதாசன், கத்தோலிக்க மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர் ஈழத்து இசையமைப்பாளர்களில் முக்கியமானவரான இவர் விருந்தினர் பக்கத்துக்காக வழங்கிய நேர்காணல் இது.

***கேள்வி:-*** நீங்கள் கலையுலகில் காலடி எடுத்து வைப்பதற்கு காரணமாக அமைந்த பின்புலங்களைக் கூற முடியுமா?

***பதில்:-*** எனக்கு நினைவு தெரிந்த சிறுவயதில் இருந்தே இசைத்துறையில் ஆர்வமிருந்தது. காரணம் எனது தந்தையார் ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவியார். அத்துடன் சிறந்த மிருதங்க வித்துவான், எனது பெரிய தகப்பனாரும் ஒரு அண்ணாவி, இவர்கள் இருவரும் கலையுலகிற்கு தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டவர்கள். இவர்களது பரம்பரையில் வந்த பின்னணியோ என்னவோ, எனக்கு சிறந்த சாரீர வளம் வாய்த்திருந்தது. இவர்களின் கூத்துக்களை பார்த்து, வாழ்ந்த தாக்கம் இசைக்கலையில் ஒரு தீராத ஆர்வத்தை ஏற்படுத்தியது. மிருதங்கத்தையும் அவர்களிடமே கற்றேன், ஒரு சிறந்த ஹார்மோனிய வித்துவானாக வரவேண்டுமென்ற என் ஆவலைப் புரிந்து கொண்ட என் தந்தையார் நான் ஐந்தாம் வகுப்பு பயின்றுகொண்டிருக்கும்போதே ஒரு ஹார்மோனியத்தை கொழும்பில் இருந்து தருவித்து 'சிவகுரு' என்னும் இசையாசிரியரிடம் சேர்த்து பயிலச் செய்தார். பதினான்கு வயதிலேயே தேவாலய விழாக்கள், நாடகங்கள் என்பவற்றுக்கு ஹார்மோனியம் வாசிக்கத் தொடங்கிவிட்டேன். ஆனால் ஆரம்பத்தில் சாஸ்திரியமாக இசை பயிலும் சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. செல்வராஜா என்பவரே மேறகத்தைய இசையைப் பயில்வதற்கு எனக்கு குருவாக அமைந்தார். தொடர்ந்து எனது முயற்சிகளால் என்னை வளர்த்துக்கொண்டேன். எனக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்கள் இத்துறையில் என்னை நிலைககச் செய்துவிட்டன.

***கேள்வி:-*** மேற்கொண்டு இசைத்துறையில் நிலைநிறுத்திக்கொள்ள உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

***பதில்:-*** நான் என்னுடைய பாடசாலைக் காலத்தில் பயின்று கொண்டிருக்கும்போது கிடைத்த சந்தர்ப்பங்கள் எனக்குத் தூண்டுதலாக இருந்தாலும், எனக்கு மிகுந்த திருப்புமுனையாக அமைந்த விடயம் நான் இந்தியாவில் பெற்ற கல்வி அனுபவமாகும். 1960 ஆம் ஆண்டு யாழ். ஆயராக இருந்த மேதகு.எமிலியானூஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள், சில இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இறையியல் கல்வியூட்டி பொதுநிலையினர் சேவையை வளர்க்க வேண்டுமென விரும்பினார். அதற்கு அவர் தெரிவு செய்த சில இளைஞர்களில் நானுமொருவன். எனது இசை ஆர்வத்தைக் கண்டே என்னை அவர் அனுப்பினார். அங்கு நான் பெற்ற இறையியல் கல்வியும், இசைக்கல்வியும் என்னை பெருமளவில் வளர்ந்து விட்டது எனலாம்.

***கேள்வி:-*** இந்தியாவில் நீங்கள் பெற்ற இசைப் பயிற்சிகள் பற்றிக் கூறமுடியுமா?

***பதில்:-*** நான் திண்டிவனம் இறையியல் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தபோது, கேரளாவைச் சேர்ந்த இசை விற்பன்னர் யோசவ் கிருஷ்ணபிள்ளை என்பவரிடம் முறையாக இசைபயின்றேன். இவரே கர்நாடக




இசையை முதன் முதலில் கத்தோலிக்க இசைமரபில் புகுத்தியவர் எனலாம்.

அதன்பின் அடையாறு கலாஷேத்திராவில் இசையில் சிறப்புப் பயிற்சி பெற்றேன். அதன்பின் சென்னையிலுள்ள "லூத்தரன் ஸ்ரூடியோவில்" 'பரமசிவம்' என்னும் இசையமைப்பாளரிடம் ஆறுமாத காலபயிறசியைப் பெற்றேன். அங்கே பல பிரபல்யம் மிக்க பாடகர்களை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கே நான் இசையமைத்த "அலை மோதும் மனமே நில்'' என்ற பாடலைப் பிரபல பாடகர் கே.கே. ஜேசுதாஸ் பாடினார். இது எனது மறக்க முடியாத அனுபவங்களிலொன்று.


***கேள்வி:-*** திருமறைக்கலாமன்றம் உங்கள் செயலாற்றுகைத் தளத்தை எவ்வாறு விரிவாக்கியது எனக்கூற முடியுமா?

***பதில்:-*** 1967 ஆம் ஆண்டு காலப பகுதியில் நான் பயிற்சி பெற்றுத் திரும்பியபோது அருட்தந்தை மரிய சேவியர் அடிகள், உரும்பிராயில் மேற்கொள்ளும் திருப்பாடுகளின் காட்சிக்கு ஒரு பாடலை கொண்டு வந்து தந்து, அதற்கு இசை அமைககும்படி பணித்தார். அதற்கு நான் உடனேயே மெட்டமைத்துப் பாடிக் காட்டினேன். அது அவருக்கு மிகவும் பிடித்து விட்டது. அதற்கு முன் அவர் திரைப்படபாடல் மெட்டுக்கே பாடல்களை எழுதினார். ஆனால் அந்த சந்தர்ப்பத்திற்குப்பின் அவரது நாடகங்கள் அனைத்துக்கும் நானே இசையமைத்தேன். பாடல்களுக்குப் புதிய இசைவடிவத்தைக் கொடுத்தேன். அந்தப் பணியை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். திருமறைக்கலாமன்றத்தினால் மேடையேற்றப்பட்ட பல நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், இசை நாடகங்கள், மௌன நாடகங்கள் அனைத்துக்கும் இசை வழங்கும் பணி எனக்குக் கிடைத்தது. இது எனது அனுபவத்தை அதிகரித்தது எனலாம். அது மட்டுமன்றி பல இசை நிகழ்ச்சிகளை நடத்தினோம், பல ஒலி நாடாக்களை வெளியிட்டோம், ஐரோப்பிய நாடுகள் வரை சென்று கலைப் பயணங்களை மேற்கொண்டோம்.

எனவே எனது தொடர் செயற்பாடுகளுக்கும், பரீட்சார்த்த முயற்சிகளுக்கும் களமமைத்துத் தந்தது திருமறைக் கலாமன்றமே எனலாம்.

***கேள்வி:-*** நீங்கள் நடத்திய இசை நிகழ்ச்சிகள், வெளியிட்ட ஒலி நாடாக்கள் தொடர்பாக விளக்க முடியுமா?

***பதில்:-*** திருமறைக் கலாமன்றத்தில் உள்ள எமது இசைக்குழுவைக் கொண்டு நான் பல இசை நிகழ்வுகளை நிகழ்த்தினேன். "மண்ணின் ராகங்கள்'', "இசை மாலை'', "இசைவிடுதூது'', "குடிலின் கானங்கள்'', "சப்த ராகங்கள்''..... என்ற பல்வேறு பெயர்களில் பல இசை அரங்க நிகழ்ச்சிகளை நிகழ்த்தினேன். இவற்றில் கர்நாடக சங்கீதம், மேற்கத்தைய இசை, கிராமிய இசை என பலவற்றையும் பயன்படுத்தியுள்ளேன். சில சமயம் சார்ந்த நிகழ்வாக இருப்பினும், ஏனையவை சமகால வாழ்வியலை வெளிப்படுத்திய பாடல்களே அவர்களால் இசைக்கப்பட்டன எனலாம். 1993 இல் "பத்தே பத்து" என்ற இசை நிகழ்வு பிரமாண்டமான அளவில் ஒளி விதானிப்புக்கள், காண்பிய அசைவுகளுக்கூடாக நிகழ்த்தப்பட்டது.


யேசுதாசன்

அது பலரின் பாராட்டுதலைப் பெற்றது. இது தவிரவும் பல ஒலி நாடாக்களை நான் தனியாகவும், திருமறைக் கலாமன்றத்துக்கூடாகவும், திருவழிபாட்டு நிலையத்துக் கூடாகவும் வெளியிட்டுள்ளேன். அவற்றில் 'கல்வாரி இராகங்கள் 1, 2', 'குடிலின் கானங்கள்', 'செம்மணல்', 'வீடு நோக்கி'.... 'திருவுந்தியார்' போன்ற பல ஒலி நாடாக்கள் குறிப்பிடத்தக்கவை.

***கேள்வி:-*** நீங்கள் பல இசையமைத்த நாடகங்கள் பற்றிக் கூற முடியுமா?

***பதில்:-*** 'நாடகம்' அது ஒரு கூட்டுக்கலை வடிவம். அதில் இசையும் ஒரு அங்கம். அந்த நாடகத்தின் ஜீவனுடன் (மறைந்து நின்று) இசை இரண்டறக் கலந்து நிற்கவேண்டும். ஒரு வகையில் இது ஒரு தனித் திறமைக்குரியது. எல்லா இசை அமைப்பாளரும் சிறந்த அரங்க இசைவல்லோனாக முடியாது. சிறுவயதில் இருந்தே எனக்கு நாடகத்துறையுடன் இருந்த ஈடுபாடு அரங்க இசையை மேற்கொள்வதற்கு துணையாக இருந்தது எனலாம். கூத்து, இசைநாடகம் போன்றவற்றுக்கு ஹார்மோனியம் வாசிப்பதுடன் பல நாடகங்களுக்கும் இசை அமைத்துள்ளேன். திருமறைக் கலாமன்றத்தில் மரியசேவியர் அடிகளின் பல திருப்பாடுகளின் நாடகங்களுக்கு இசை அமைத்துள்ளேன். "பலிக்களம்'', "சிறுவர் உலா'', "கல்வாரிக் கலம்பகம்'', "கலவாரிப் பரணி''.. என்று பல. தற்போது யோண்சன் ராஜ்குமார் நெறியாள்கை செய்கின்ற "குருதி கழுவிய குவலயம்'', "கல்வாரி யாகம்'' போன்றவற்றுக்கும் இசை அமைத்து வருகிறேன். இது தவிர பல நவீன நாடகங்களுக்கும் இசை அமைத்துள்ளேன். குறிப்பாக மரியசேவியர் அடிகளால் அறிமுகம் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்ட மௌன நாடகங்களான "அசோகா'', "தரிசனம்'', "திருச்செல்வர் காவியம்'', "புறம்'' போன்ற நாடகங்களுக்கும் இசையமைத்தேன். இந்நாடகங்களில் இசை மிகப் பிரதானமான உரையாடல் பொருளாய் இருக்கும். இந் நாடகங்களை கொழும்பில் பார்த்த பல சிங்களக் கலைஞர்களே விதந்து பாராட்டினார்கள், பத்திரிகைகளும் பாராட்டி எழுதி இருந்தன.

***கேள்வி:-*** இசைவாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள் ஏதும் உண்டா... அது பற்றி..?

***பதில்:-*** பல அனுபவங்களுண்டு.... ஐரோப்பிய நாடுகளில் கலைப்பயணம் மேற்கொண்டு நிகழ்ச்சிகளை நடத்தியபோது எமக்கு மிகப் பெருமளவில் வரவேற்புக் கிடைத்தது... ஜேர்மனியில் நாடகமொன்றை நிகழ்த்திய போது நான் நேரடியாக இசை வழங்கினேன். ஆனால் பலர் வந்து இசைக்கு சி.டி பயன்படுத்தினீர்களா என்று கேட்டனர். நான் இல்லை எனறு சொன்னபோது நம்ப மறுத்து விட்டார்கள்.. இவ்வாறு பல அனுபவங்களைக் கூறலாம்.... முன்னர், 70 களில் மரிய சேவியர் அடிகள் தொலைபேசியில் அழைத்து இரண்டு பாடல்களைக் கூறி அதற்கு இசை அமைத்து தரச்சொன்னார். நான் சில நிமிடங்களிலேயே அதறகு மெட்டுப்போட்டு தொலைபேசியிலேயே பாடிக்காட்டினேன். அவர் மிகவும் பாராட்டினார். இவ்வாறான பல அனுபவங்கள் மறக்கமுடியாதவை.

***கேள்வி:-*** ஈழத்தில் மதிக்கப்படும் இசையமைப்பாளராக உள்ளீர்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசை அமைத்துள்ளீர்கள்.. இசைப்பக்க அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முடியுமா....

***பதில்:-*** ஒரு குழந்தையை பிரசவிக்க வேதனைப்படும் தாய் அந்த குழந்தையை கண்டவுடன் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாளோ, அந்த நிலையையே ஒரு படைப்பாளன் அதாவது இசை அமைப்பாளன் அடைகின்றான். இசை, படைப்பாளனின் மன நிலையைப் பொறுத்தே உருவாகின்றது. அந்த உணர்வாக்கம், அதாவது **mood** எந்த வேளையிலும் வரலாம். துவிச்சக்கரவண்டியில் போகும் போதோ.... அல்லது அதிகாலை வேளையிலோ அல்லது படுத்திருக்கும்போதோ அந்த **mood** வரலாம். அது வந்துவிட்டால் அந்தக்கணத்தில் மடை திறந்த வெள்ளம்போல ஒரு படைப்பு உருவாகிவிடும். மனதில் அமைதியும், நினைவில் தூய்மையும் கூட இந்தப் பணியை இலகுவாக்கும். சிலவேளைகளில் எப்படி மண்டையை போட்டு உடைத்தாலும் மனதுக்கு பிடித்த இசை அமையாது விடலாம். என்னைப் பொறுத்தவரை நானே பாடல்களை எழுதி இசை அமைக்கும்போது எனக்கு இலகுவாக இருககின்றது. கர்நாடக இசையில் இசையமைக்கும்போது "சாஸ்திரிகமே'' மேலோங்கி நிற்கின்றது. கட்டுக்குள் நின்றே ஆக்க வேண்டியுள்ளது. ஆனால் மெல்லிசைக்கு அவ்வாறு இல்லை.

எவ்வாறிருந்தாலும் இசை, மானுடத்தை மகிமைப்படுத்துவதாக அமையவேண்டும்.

**நேர்காணல்-எஸ்.சாந்தன்**



# காலனை காலால் உதைத்த சிவபெருமான் காத்தருளினார் மார்க்கண்டேயனை!

மிருகண்டு முனிவருக்கும் மருத்துவதிக்கும் சிவனருளால் ஒரு புத்திரன் பிறந்தான்.தேவதுந்துபிகள் முழங்கின, எல்லோரும் ஆசி கூறினார்கள். மிருகண்டு முனிவர் கங்கையில் நீராடித் தானம் வழங்கினார். நான்முகன் வந்து அம்மகவுக்கு "மார்க்கண்டேயர்'' எனப் பெயரிட்டழைத்தார். மார்க்கண்டேயர் வளர்பிறை மதியென வளர்ந்து வந்தார். உபநயனம் பெற்றார், அவர் வேதம் முதலிய கலைகளைப் பயின்றார், வேதங்களின் மெய்ப்பொருளை உணர்ந்து சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று துணிந்தார்.

இங்ஙனம் பதினாறு ஆண்டுகள் சென்றன. தாய் தந்தையர் அதனை உணர்ந்து, தங்கள் புதல்வனை நோக்கித் தனித்தனியே இருந்து துயரக் கடலில் ஆழ்ந்து வருந்தினார்கள். மார்க் கண்டேயர் தாய் தந்தையர் பாதங்களை வணங்கி, "நீங்கள் துன்பமுறும் காரணம் யாது? நிகழ்ந் ததைச் சொல்லுங்கள் என்று வினாவினார். அதற்கு அவர்கள் "மைந்தனே, முன்னாளிலே சிவபெருமான் உனக்கு வயது பதினாறு என்று அருளிச் செய்தார். அப்பதினாறு வயது உனக்கு ஆகிவிட்டது, அதனால் துன்பமுறுகின்றோம்" என்று தெரிவித்தார்கள்.

மார்க்கண்டேயர் சிவபெருமானின் திருவருளைத் துணையாகக் கொண்டு, மணி கன்னிகை என்னும் திருக்கோயிலை அடைந்தார். அன்பு பெருக்கெடுத்து, என்புகள் நெக்கு நெக்கு உருக, கண்களில் ஆனந்த அருவி வழிய, சிவபெருமானை வலஞ்செய்து வணங்கித் தென்றிசையின் ஓரிடத்து இருந்துகொண்டு சிவலிங்கம் ஸ்தாபித்துப் பலநாள் அன்போடு பூசித்துத் துதித்து அருந்தவம் செய்தார்.பக்தி வலையிற்படுவோனாகிய் சிவபெருமான் தோன்றி "நீ குற்றமில்லாது செய்யும் பூசையைக் கண்டு மகிழ்ந்தோம், உனக்கு வேண்டுவது யாது?" என்று திருவாய் மலர்ந்தருளினார். மார்க்கண்டேயர் எம்பெருமான் திருவடிகளைப் பலவாறு துதித்து "சிறியேன் கூற்றுவன் கையுறாமல் உய்யத் தேவரீர் அருளல் வேண்டும்" என விண்ணப்பம் செய்தார். சிவபெருமான் "இயமனுக்கு அஞ்சற்க, அஞ்சற்க'' என்று அபயம் தந்தருளி மார்க்கண்டேயர் தலையின் மேல் தம் திருவடிகளிரண்டையும் வைத்தருளினார்.

மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு நிரம்பியது. சித்திரகுத்தர் என்னும் கணக்கர்கள் இருவரும் இயமனை நோக்கி "அரசே! சிவபெருமான் முன்னானில் மார்க்கண்டேயனுக்கு அளித்த வயது பதினாறு. அவ்வெல்லை சென்று விட்டது'' என்றனர்.

கூற்றுவன் பதைத்தெழுந்து எருமைக் கடாவின் மேல் ஏறி, தன் வீரர்கள் சூழ, பாசமும், தண்டமும், சூலமும் ஏந்தி, சிவந்த தலைமயிரும், கரிய சரீரமும், கோபத்தினால் நெருப்புப்போலச் சொலிக்கும் கண்களுமாய் மார்க்கண்டேயர் பால் வந்து அணுகினான். இயமன் வந்து அணுகியதை உணர்ந்த மார்க்கண்டேயர் எம்பெருமான் திருவடிகளை வணங்கித் துதித்தார். அப்போது இயமன் மார்க்கண்டேயரை நோக்கி "மைந்தனே ! நீ என்ன நினைத்தாய்! ஊழ்வினையையும், சிவபெருமானின் திருவாக்கையும் மாற்ற முடியுமா? இறப்பும், பிறப்பும் யாவருக்கும் பொதுவாகும். நீ செய்யும் சிவபூசை உன் பாவத்தைப் போக்குமேயன்றி, நான் வீசும் பாசத்தை விலக்கவும் வல்லதோ! என் ஆணையால் இறந்த இந்திரர்கள், தேவர்கள், அசுரர்கள் எண்ணற்றவர்கள் ஆவர். நான்முகனுக்கும், திருமாலுக்கும், எனக்கும் பிறப்பும், இறப்பும் உண்டு. நான் உன்து நின்று மீளேன். இது திண்ணம். ஆதலால் நீ என்பின் வருக'' என்றான். மார்க்கண்டேயன் முன் சென்று பாசத்தை வீசி இழுத்தான்.

தேவர்கள் "இனி மார்க்கண்டேயன் இறந்தான்'' என்று மயங்கினார்கள். இயமன் கைப் பாசம் தம் கழுத்தில் உற்றும், சிறிதும் துன்பமுறாத மார்க்கண்டேய முனிவர் முன்பு, முழுமுதற் கடவுளாகிய சிவபெரும்மான் "மகனே! உன் துன்பத்தை தீர்க்கின்றோம் நீ அஞ்சற்க, அஞ் சற்க'' என்று தீருவாய் மலர்ந்து கொண்டு இலிங்கத்தினின்று தோன்றியருளினார்.

இயமன் மதம் மிகுந்து நம் மகனின் உயிரைக் கொண்டுபோக நினைத்தான் என்று பெருங் கோபம் கொண்டு தமது இடது பாதத்தால் இயமனைச் சிறிது உதைத்தருளனினார் . உதை பட்ட இயமன் கரியமேகத்தைப் போலப் பூமியில் வீழ்ந்து இறந்தான். மார்க்கண்டேயர், கூற்றுவன் கீழே விழும்போது சிவனைப் போற்றியவாறு நின்றார். சிவன் மார்க்கண்டேயரை நோக்கி "மகனே! நீ மெய்யன்போடு நம்மைப் பூசை செய்தமையால் நாம் உமக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்'' என்று திருவாய் மலர்ந்து சிவலிங்கத்துள் மறைந்தருளினார்.

மார்க்கண்டேயரை எதிர்த்துக் கூற்றுவன் இறந்தமையால் நிலவுலகிலுள்ள உயிர்களெல்லாம் நெடுங்காலம் இறப்பில்லாமல் வளர்ந்து பெருகின. அதனால் பூமிதேவி பாரம் தாங்காது வருந்தித் திருமாலிடம் சென்று முறையிட்டாள். திருமால், நான்முகன் இந்திரன் முதலிய தேவர்களை அழைத்துக்கொண்டு திருக்கயிலாயம் சென்று "கூற்றுவன் செய்த தீமையைப் பொறுத்தருளி, அவனை உயிர்ப்பித்தருள வேண்டும்'' என வணங்கி வேண்டினர்.

அப்போது சிவபெருமான் திருவருள் சுரந்து "ஓ இயமனே! எழும்பக் கடவாய்'' என்றார். அவ்வளவில் கூற்றுவன் உயிர் பெற்றெழுந்தான்.

மார்க்கண்டேயர் ஊழையும் வென்று, கூற்றுவன் வலியை அகற்றி எக்காலத்தும் இறவாத சிரஞ்சீவித் தன்மையினைப் பெற்றார்.

இம் மார்க்கண்டேயர் சரிதை சிவன் கோவில்களிலே "இயம சங்காரத் திருவிழாவாக'' இவ் ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டு வருகின்றது.

கந்தபுராணக் கலாசார மையமாக விளங்கும் நல்லூரில் அமைந்துள்ள நல்லூர் சிவன் கோவிலிலே இன்றைய தினம் இவ் இயமசங்காரத் திருவிழா வெகு விமர்சையாக ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது.

"அவனருளால் அவன் தாள் வணங்குவோம்''

*கவிமாமணி காரை. எம்.பி. அருளானந்தன்*

# அபிவிருத்தி அடையும் நாடுகளில் இலங்கைக்கு 103 ஆம் இடம் !

## றொனி டி மெல் தகவல்

(கொழும்பு நிருபர்)

உலகிலுள்ள அபிவிருத்தி அடைந்து வரும் 150 நாடுகளில் இலங்கை 103வது இடத்திலே இருப்பதாக உ ந்டாட் அமைப்பின் கணிப்பீடுக [illegible] இருந்து தெரியவந்துள்ளதாக முன்னாள் நிதியமைச்சரும் பொது ஜன ஐக்கிய முன்னணி நாடாளு மன்ற உறுப்பினருமான றொனி டி மெல் தெரிவித்திருக்கின்றார்.

வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுக் கலவரங்களால் மோச மாகப் பாதிக்கப்பட்டுள்ள அங் கோலா, நிக்கரகுவா, உகண்டா, சிம் பாப்வே போன்ற நாடுகளை விட இலங்கை பொருளாதார ரீதியில் கீழ்நிலையிலேயே உள்ளது.

இவ்வருடம் 160 முதலீட்டாளர் கள் தொழில் முயற்சிகளில் ஈடுப டுவதற்கு அனுமதிக்கப்பட்ட போதும ஆறு தொழில் முயற்சிகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்புப் பங்குச்சந்தையும் வீழ்ச்சி கண்டு வருகின்றது.

இந்த மோசமான நிலைக்கு அர சின் தவறான பொருளாதாரக் கொள கையும், அபிவிருத்தியற்ற நோக்குமே காரணம் என றொனி டி மெல் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்


### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

அகவை இரண்டில்



பெயர் : அ.அபிநந்தன்
முகவரி: 49/4A, யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.



பெயர் : முருகானந்தம் ஆகாஷ்
முகவரி: மீசாலை மேற்கு, மீசாலை.



பெயர் : கு.துளசிகா
முகவரி: செல்வா வீதி, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

அகவை மூன்றில்



பெயர் : ஜாகதீபன் யோகதாஸ்
முகவரி: கம்பர் மலை, உடுப்பிட்டி.

அகவை ஐந்தில்



பெயர் : கோ.கானகி
முகவரி: சிங்கராயர் வீதி, கல்வியங்காடு

அகவை ஏழில்



பெயர் : பி.ஷிரோமி
முகவரி: கண்டி வீதி, அரியாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# அதிர்ஷ்ட வாரம்

## 15.11.2002 முதல் 21.11.2002 வரை

### மேடம்



(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரப் பகுதியில் பலவிதமான செலவுகள், மனச்சஞ்சலம், தேவை யற்ற பிரச்சினை, எதிலும் திருப்தி யில்லாத நிலையும் வார இறுதியில் தேகசுகக் குறைவுடன் வார நடுப் பகுதியில் மகிழ்ச்சி, எதிலும் வெற்றி காணுதல், அறுசுவையுண்டி, ஆடை ஆபரண பலன், ஆகிய நற்பலன் களும் நிகழலாம். மாதாவின் தேக சுகம் நன்று, புத்திரர்களுக்கு வார ஆரம்பத்தில் மட்டும் தேகசுகக் குறைவும் தேவையற்ற பிரச்சினை களும் நிகழலாம், திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன் மனைவி தேகசுகம் சமம், பிதா தேகசுகம் நன்று, செய்தொழில் வரவு சமம், தொழில்ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன் னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### இடபம்



கார்த்திகை, 2, 3, 4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம், 1, 2ஆம் பாதம்.

இந்த இராசியிற் பிறந்தவர் கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, செய்தொழில் திறமை, சுபகாரியங் களில் பங்கு, பெண்கள் மகிழ்ச்சி, தெய்வசேவை, சமயஅறிஞர் தரிசனம், அறுசுவையுண்டி, ஆடை ஆபரண பலன், நண்பர்கள் உறவினர் மகிழ்ச்சி முதலிய நற்பலன்களுடன் வார நடுப்பகுதியில் மட்டும் வரவுக்கு மிஞ் சிய செலவு, கர்வநிலை உருவாகும, தேவையற்ற பகை முதலிய தீய பலன்கள் இடம்பெறலாம். மாதா தேகசுகம் சமம், புத்திர தேகசுகம் சமம், திருமணப்பேச்சுக்கள் முன் னேற்றமடையும், கணவன் மனைவி தேசுகம் சமம், பிதா தேசுகம் நன்று, செய்தொழில் லாபம், தொழில்ஸ் தானத்தில் சிறப்பாக தொழில் புரிய முடியும், மாணவர் கல்வி முன்னேற் றம், வர்த்தகர்களுக்கு சமமானவாரம்.

### விருச்சிகம்



விசாகம் 4ஆம் பாதம் அனுஷம், கேட்டை

இந்தராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, தெய்வ வழிபாடு, பொதுசேவையில் நற் பெயர், புகழ், எதிரியின் ஆர்வம் குன்றுதல், பழையகடன்கள் வசூலா கும், மனமகிழ்ச்சி, சுபகருமங்களில் பங்கு, ஆடை ஆபரண மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, கலைநிகழ்ச்சியில் மகிழ்ச்சி, ஆகிய பலன்களுடன் மாதா சுகம் மத்திமம், புத்திர சுகம், திருமணப்பேச்சு தாமதமடையும், கண வன் மனைவி தேகசுகம் மத்தி மம், பிதா தேகசுகம் மத்திமம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வர்த்தகர்களுக்கு சமமானவாரம்.

### தனு



மூலம், பூராடம், உத்தராடம், 1ஆம் பாதம்.

இந்தராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் வீட்டில் செலவு, வாகனச்செலவு, அயலவர் களுடன் சிறிது பிரச்சினை, தேவை யற்ற அலைச்சல் ஆகிய தீய பலன் களுடன் ஞாயிற்றுக்கிழமையின் மேல் பொதுசேவையில் புகழ், தேக சுகம் நன்று, உறவினர் நண்பர்கள் வருகை, விருந்துபசாரம், பணவரவு, கடன்வசூல், புதிய கடன் வசதி ஆகிய நற்பலன்களுடன் மாதா தேகசுகம் நன்று, புத்திரர் சுகம் சமம், திருமணப்பேச்சு முன்னேற்றம், கணவன்- மனைவி தேகசுகம் நன்று, பிதா தேகசுகம் சமம், செய் தொழில் முன்னேற்றம், தொழில்ஸ் தானத்தில் சாதாரணமாக தொழில் புரியலாம், மாணவர் கல்வி முன் னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### மிதுனம்



மிருகசீரிடம் 3, 4ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, பண வரவு, பொது சேவையில் கௌர வம், மரியாதை, சுபகாரியங்களில் பங்கு, அறுசுவையுண்டி, ஆடை ஆப ரண பலன், பெண்கள் மகிழ்ச்சி, தெய்வதரிசனம், சமய அறிவுடை யோர் தரிசனம் ஆகிய பலன்களுடன் வார இறுதியில் மட்டும் தேகசுகம் சிறிது பாதிப்படையும், தேவையற்ற செலவு, முதலிய பலன்கள் நிகழ லாம், மாதா தேகசுகம் சமம், புத் திரர் சுகம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன் மனைவி தேகசுகம் நன்று, பிதா தேகசுகம் நன்று, செய்தொ ழில் லாபம், தொழில் ஸ்தானத்தில் சாதா ரணமாக தொழில் புரியலாம், மாண வர்கள் கல்வி முன்னேற்றம், வர்த்த கர்களுக்கு சிறந்த வாரம்.

### கர்க்கடகம்



புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, பணவ ரவு, மனமகிழ்ச்சி, சுபகாரியங்களில் பங்கு, நண்பர்கள் உறவினர் மகிழ் ச்சி, அறுசுவையுண்டி, ஆடைஆப ரண பலன், பெண்கள் மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சியில் ரசனை, தெய்வ தரிசன பலன், சமய அறிஞர் உறவு, ஆகிய நற்பலன்களுடன் மாதா தேக சுகம் நன்று, புத்திரர் சுகம் நன்று, திருமணப்பேச்சு தாமதமடையும். கணவன் மனைவி மகிழ்ச்சி, பிதா தேகசுகம் சமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பாக பணியாற்ற முடியும், மாண வர்களுக்கு கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.

### மகரம்



உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, பணவ ரவு, சுபகருமங்களில் பங்கு, அறு சுவையுண்டி, ஆடையாபரண பலன், தெய்வவழிபாடு, பொதுசேவையில் பங்கு, கௌரவம், வாரநடுப்பகுதி யில் மட்டும் தேகசுகக்குறைவு, வாக னச்செலவு ஆகிய பலன்களுடன் மாதா தேகசுகம் சமம், புத்திரர் சுகம் சமம், திருமணப்பேச்சு தாம தமடையும், கணவன் மனைவி தேக சுகம் சமம், பிதா தேகசுகம் சமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பாக பணியாற்ற முடியும், மாணவர் கல்வி முன்னேற் றம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.


### சிங்கம்



மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் தேகசுகக் குறைவு, போக்குவரத்தில் கவனம் எடுத்தல் வேண்டும், தேவையற்ற பிரச்சினைகள் உருவாகலாம், ஞாயிற் றுக்கிழமையின் மேல் தெய்வதரி சன பலன், சமய அறிஞர் தரிசனம், பிதாவின் ஆசீர்வாதம், பொது சேவையில் மதிப்பு, நண்பர்கள் உற வினர் மகிழ்ச்சி, ஆகிய பலன்களு டன், மாதா தேகசுகம் நன்று, புத் திரர் சுகம் சமம், திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், பிதா தேகசு கக்குறைவு, செய்தொழில் முன் னேற்றம், தொழில்ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வர்த் தகர்களுக்குச் சிறந்த வாரம்.

### கன்னி



உத்தரம், 2, 3, 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, மன மகிழ்ச்சி, விருந்தினர் உறவு, அறு சுவையுண்டி, ஆடை ஆபரண பலன், தெய்வதரிசனம், சமய அறிஞர் உறவு, பிதாவின் ஆசீர்வாதம் ஆகிய பலன்களுடன், திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்கள் மட்டும் தேகசுகம் சிறிது பாதிப்படையலாம், போக்குவரத்தில் சிறிது கவனம் எடுக்கவும், புதிய கருமங்கள் ஆரம் பிப்பதைத் தவிர்க்கவும், மாதா சுகம் சமம், புத்திரர் சுகம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், கண வன் மனைவி தேகசுகம் சமம், பிதா வின் தேகசுகம் சமம், செய்தொழில் முன்னேற்றம் சமம், தொழில் ஸ்தா னத்தில் ஒரு சில கஷ்டங்களுடன் தொழில் செய்யலாம், மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்க ளுக்கு மத்திமமான வாரம்.


### துலாம்



சித்திரை 3, 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவாகட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, பண வரவு, கடன் வசூல், மனமகிழ்ச்சி, எதிரியின் ஆணவம் குன்றுதல், விருந்தினர் வருகை, திருமண வைபவங்களில் பங்கு, அறுசுவை யுண்டி, ஆடை,ஆபரண மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சியில் ரசனை ஆகிய நற்பலன்களுடன், வார இறுதியில் மட்டும் தேகசுகம் சிறிது பாதிப் படையலாம், தேவையற்ற பகை, புதிய காரியங்கள் தொடங்குவ தைத் தவிர்க்கவும், மாதா சுகம், புத்திரர் சுகம் சமம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், கண வன் மனைவி மகிழ்ச்சி, பிதாவின் தேகசுகம் சமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் சிறப்பாக பணியாற்ற முடியும், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண் டும், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### கும்பம்



அவிட்டம், 3, 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு குறைவு, வந் தாலும் கையில் தங்காது. பெண் களால் சண்டை, வாக்குவாதம், மனச்சஞ்சலம், அயலவர்களுடன் பிரச்சினை, வாகனச்செலவு, தேவை யற்ற செலவு ஆகிய பலன்களுடன் வார நடுப்பகுதியில் மட்டும் விருந் தினர் வருகை, அறுசுவையுண்டி, ஆடையாபரண பலன், இளைய சகோதரர் வருகையுடன் மாதா சுகம் சமம், புத்திரர் சுகம் நன்று, திரு மணப்பேச்சு முன்னேற்றமடைதல், கணவன் மனைவி சுகம், பிதா தேகசுகம் சமம், செய்தொழில் லாபம், தொழில்ஸ்தானத்தில் நற் பெயர், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

### மீனம்



பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, பண வரவு, விருந்தினர் வருகை, சுப மங்கள வைபவங்களில் பங்கு, அறு சுவையுண்டி, ஆடையாபரண பலன், இளைய சகோதரர் வருகையுடன் வார நடுப்பகுதியில் மட்டும் வர வுக்கு மிஞ்சிய செலவு, வாக்குவா தம் ஆகிய பலன்களுடன் மாதா சுகம் நன்று, புத்திரர் சுகம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றம், கண வர் மனைவி சுகம், பிதா தேகசுகம் நன்று, செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் சாதாரணமாக தொழில் புரியமுடியும், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வர்த் தகர்களுக்குச் சிறந்த வாரம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# யாழ்.நிக்கொட் திட்டங்களுக்கு அரசின் அங்கீகாரம் கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் பல செயற்திட்டங்களுக்கு அரசின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

திருகோணமலையில் நேற்றுக் காலை நடைபெற்ற அரச அதிகாரிகளின் விசேட மாநாட்டில் மேற்படி செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், சமூக அபிவிருத்தி போன்ற துறைகளில் பல செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் அங்கீகாரத்துக்காக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் நேற்றைய கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வட-கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களின் அரச அதிகாரிகள் மற்றும் வட-கிழக்கு மாகாண சபை உயர் அதிகாரிகள் பலரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்ட அனைத்துச் செயற்திட்டங்களும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (க)

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

CES

AVAILABLE COURSES
- MS OFFICE 2002
- VISUAL BASIC 6.0
- ORACLE 8.i
- JAVA 2
- HARDWARE
- C++

Closing Date: 15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

# கூடியிருந்த பொது மக்கள் தரப்பிலிருந்து அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை

## காஞ்சிரங்குடா படுகொலை தொடர்பாக நீதிமன்று தீர்ப்பு

(அம்பாறை)

அம்பாறை - காஞ்சிரங்குடாவில் இடம்பெற்ற சம்பவத்தில் பலியான பொதுமக்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே கொல்லப்பட்டனர் என்றும் - சாட்சியங்கள், சம்பவம் நடைபெற்ற இடம் என்பவற்றைப் பார்க்கும் போது பொதுமக்கள் தரப்பில் எந்தவொரு அசம்பாவிதங்களும் இடம்பெற்றதாகத் தெரியவில்லையென்றும் - அக்கரைப்பற்று நீதவான் எம்.வை.எம். இசதீன் தீர்ப்புக் கூறியுள்ளார்.

காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப் படையினரின் தாக்குதல் பற்றிய இந்த விசாரணையில் - நான்கு படையினர் , பொது மக்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்களென 13 பேர் சாட்சியமளித்திருந்தனர்.

நீதிவான் எம்.வை.எம். இசதீன் தனது தீர்ப்பில் - குறிப்பிட்ட சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

இச்சம்பவத்தில் விசேட அதிரடிப்படையினரால் பயன்படுத்தப்பட்ட ரி-56 மற்றும் பத்து எம்-16 ரகத் துப்பாக்கிகள், அக்கரைப்பற்றுப் பொலிஸாரினால் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன.

## சமாதான...

பிரபாகரனுக்கு எதை அரசாங்கம் கொடுக்கப்போகிறது என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள் என மக்கள் என்னிடம் கேட்கின்றனர். சமாதான முயற்சிகளை குழப்பக் கூடாது என்பதற்காகவே நான் எதுவும் செய்யாது இருக்கின்றேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# ஒஸ்லோ மாநாட்டில் ரணில் – பாலா சந்திப்பர்

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து உரையாடுவாரெனவும், இச்சந்திப்பானது தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுக்கள் பற்றிக் கலந்துரையாடவும் இப்போது ஆராயப்பட்டு வருகின்ற சில அரசியல் விவகாரங்கள் பற்றிப் பேசவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பாக அமையும் என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, ஒஸ்லோ மாநாட்டில் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், சமூக அபிவிருத்தி போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி உதவிகளைப் பெறவே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் -

இம்முறை ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலினால்தான் பெரும் நிதியுதவி கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## அரசு - புலிகள்....

தரப்பு உறவுகளை ஜனாதிபதி சந்திரிகாவின் யோசனை பாதிக்கும். அவரது யோசனை எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமுடையது என பதும் கேள்விக்குரியதாகும்.

சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரதும் - ஒத திசைவுடன் உருவாக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுக்கான உபகுழு - தனது ஆராய்வுகளை முடித்த பின்னர் - சிபாரிசுகளைச் சமர்ப்பிக்கும். அதன்பின் அச்சிபாரிசுகள், பாராளுமன்றத்துக்கும், மக்களின் கருத்துக் கணிப்புக்கும் கொண்டுசெல்லப்படும். அரசாங்கம் தானாக, எந்தத் தீர்வையும் நடைமுறைப்படுத்த முயற்சிக்காது என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பு...

பிரிவுகளில் இருந்தும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக திரட்டப்பட்ட தகவல்களையும், வரைபடங்களையும் யாழ்.அரச அதிபர் இக்கூட்டத்துக்கு எடுத்துச் செல்லவுள்ளார். இவ் வரைபடங்களின் அடிப்படையில் உயர்பாதுகாப்பு வலயத்தின் எல்லைக் கோடுகளை தெளிவாக வரையறை செய்வதற்கு முயற்சி எடுக்கப்படவுள்ளது. (க)

மாபெரும் போட்டி நிகழ்ச்சியும் நவீன நடன நிகழ்ச்சியும்

வந்து பார்த்து ரசியுங்கள்

டிஜிட்டல் மீடியா நெட்வேக் நிறுவனம் சுவிஸ் சிகரம் நிறுவனத்தின் ஆதரவுடன் நடாத்திய 'அறிவுச்செல்வம் 2002' இன் இறுதி நிகழ்ச்சிகள் 15.11.2002 (வெள்ளி) காலை 9.00 மணி முதல் மாலை 6 மணி வரை!

ஆம்! ஒரு லட்சம் வெற்றிப் பரிசை வெல்லப்போகும் அந்த அதிர்ஷ்டசாலி மாணவன் யார்?

வாருங்கள்! பாருங்கள்!! தெரிந்துகொள்ளுங்கள்!!!

பிரவேசம் : இலவசம் (036) யாழ்.வீரசிங்கம் மண்டபம்

## கைவிடப்படும் ....

பல இளைஞர் யுவதிகள் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளாமல் தவறான உறவுகளின் மூலம் குழந்தைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். குழந்தைகளைப் பெற்ற பல பெண்கள், இக்குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் எடுக்காமல் தமது கணவனைப் பிரிந்த நிலையில் நீதிமன்றத்தில் பராமரிப்பு நிதியைப் பெற வழக்குத் தாக்கல் செய்கின்றனர். இப்படி பெண்கள் வழக்குத் தாக்கல் செய்யும்போது இவர்களின் கணவன்மாரைக் கண்டுபிடிக்கப் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. இதனால் பெண்களுக்குச் சார்பாக நீதி கிடைக்காமல் போகின்றது என விக்னராஜா சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு மரபணுப் பரிசோதனைகள் மூலமே உறுதியான தீர்வினைக் காணமுடியும். ஆனால் யாழ்ப்பாணத்தில் மரபணுப் பரிசோதனையை நடத்த முடியாது. கொழும்பிற்கு சென்றுதான் இம்மரபணுப் பரிசோதனையைச் செய்ய வேண்டும்.

தற்போது யாழ். நீதிமன்றத்தில் பதினைந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவைகளில் தாய், சேய், தந்தையென மொத்தமாக நாற்பத்தைந்து பேரை இம் மரபணுப் பரிசோதனைக்குட்படுத்த வேண்டும். இவர்கள் அனைவரையும் கொழும்புக்கு அனுப்பி மரபணுப்பரிசோதனையை மேற்கொள்ளப் பல பிரச்சினைகள், செலவுகள் இருப்பதால் இவ்வாறு செய்யமுடியாது. எனவே யாழ்ப்பாணத்தில் இவ்வாறான மரபணுப் பரிசோதனையை மேற்கொள்வதற்கு கொழும்பில் அல்லது பிறநாடுகளிலிருந்து இப் பரிசோதனைக் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து இப்பரிசோதனையை மேற்கொள்ள யு.என்.எச்.சி.ஆர். உதவி செய்ய வேண்டும் என யாழ். நீதவான் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

முக்கிய அறிவித்தல்

கொழும்பு, நுவரெலியா
மிக முன்னணி அரசறிவியல்
விரிவுரையாளர்

BY.S.சுபாஸ்கரன்

G.A.Q. B.A.Part I,II
ஆரம்பம் 16.11.2002 9 A.M.

நியூட்டன்
உயர் கல்வி நிறுவனம்
ஆரியகுளம் சந்தி, யாழ்.நகர்.
(032)

மக்கள் வங்கி அனுசரணையுடன்

நமது ஈழநாடு நடாத்தும்

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை
மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு - 2002

எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த மேற்படி கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் யா/வேம்படி மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

க.பொ.த. (சா/த) 2002 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் இக்கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெற வருமாறு மாணவ மணிகளை வரவேற்கின்றோம்.

அனுசரணை :-

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்கில் இணைந்து நீங்களும் பயன்பெறுவீர்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.18 | 96.60 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.06 | 153.33 |
| 1 யூரோ | 96.52 | 97:51 |
| 1 சுவிஸ் பிராங் | 65.68 | 66.74 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.52 | 54.40 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.72 | 25.72 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.